தராசு



ஸி.ஆர். ஸ்ரீநிவாஸன்

X5B:13R

தராசு

'சுதேசமித்திரன்' ஆசிரியர்

ஸி. ஆர். ஸ்ரீநிவாஸன், பி. ஏ.

எழுதியது.

MADRAS-1

சுதேசமித்திரன் புத்தகசாலை,
சென்னை,

முதற் பதிப்பு – ஆகஸ்ட் 1942.

17140

விலை ரூபா 1.

முகவுரை

தமிழ் தாய்ப்பாஷை; ஆளுவது சுலபம்; ஆசை ஒன்று தான் வேண்டும். ஆசை வெகு நாள் வரையில் இல்லை. சமீப காலமாகவே சிரத்தை பிறந்திருக்கிறது. உதாசீனம் செய்தவர் உபயோகிப்பதில் சிரமம் காண்கின்றனர். நுட்பமான நூதனமான கருத்துக்களை வெளியிட இயலவில்லை என்கின்றனர். பாஷையின் குறை அல்ல அது; பாஷையைப் பண்படுத்தத் தவறியவரின் குற்றம்.

பிறர் மீது தோஷம் கூறவில்லை; என்னையே நான் நொந்துகொள்ளுகிறேன். தாய்ப்பாஷையை நானும் திரஸ்கரித்தேன். அதன் சிறப்பையோ செல்வத்தையோ பள்ளியில் கற்கவில்லை. நான் படித்த காலத்தில் மோகம் எல்லாம் ஆங்கிலத்தில் லயித்திருந்தது. அரசனை நம்பி, புருஷனைக் கைவிட்ட கதையாயிற்று. ஆங்கிலத்தேர்ச்சி கூலியளவிற்கே உதவிற்று. கூலிக்காசைப்பட்டவர் குடியுறவை இழந்தனர்.

விதியின் விளையாட்டு! இளமையில் இகழ்ந்தேன்; முதுமையில் புகழ்கிறேன். தமிழ் ஜீவசக்தி நிறைந்த பாஷை; இழுத்த இழுப்புக்கு

வரும். ஆழ்ங்காணுத கருத்துகளை அடக்கியாளும் பாஷை என்பதை வள்ளுவர் மெய்ப்பித்தார். ஆனந்தத் தாண்டவம் புரியும் அருஞ்ஜோதி அடங்கிய பாஷை என்பதை பாரதியார் மெய்ப்பித்தார். என்னுடைய அநுபவமும் இது தான். இப்புத்தகத்தில் அடங்கிய கட்டுரைகளே இதற்குப் பிரமாணம்.

20-8-42 ஸி. ஆர். ஸ்ரீநிவாஸன்

முன்னுரை

நண்பர் வி. ஆர். ஸ்ரீநிவாஸன் எழுதியிருக்கும் 'தராசு'க்கு அவருடைய முகவுரையே போதும். என்னுடைய முன்னுரை, மிகையாகும். இருந்தாலும், நான் முன்னுரை எழுதுவதில், தக்க காரணமும், ஒருவகையில் பொருத்தமும் உண்டு. அந்தக் காரணத்தையும் பொருத்தத்தையும் சொல்லுவதுதான் பெரும்பான்மையில், இந்த முன்னுரையின் நோக்கமாகும்.

தமிழ் நூல்களை மிகுதியும் படித்த பண்டிதர்கள், தாங்கள் படித்த பழைய நூல்களின் மேன்மையில் பிரமை தட்டிப்போய், அவர்கள் வெறும் புலவர்களாகவே இருந்து விடுகிறார்கள். இந்தப் பொது விதிக்கு விலக்கு, காலஞ்சென்ற மகாமகோபாத்தியாய சாமிநாதையர் அவர்கள். அவருடைய புலமை முற்ற முற்ற, அவர் எளிய, அழகான தமிழ் நடையில் எழுதத் துவக்கி விட்டார். தமிழ் நூலாசிரியர்களின் பரம்பரை 'கனம்' அவரை, அமிழ்த்தி விடவில்லை.

தமிழ் நூல்களை அதிகமாகப் படிக்காதவர்கள், தமிழில் எழுதுவதற்கே, பயப்பட்டுக் கொண்டிருந்தார்கள். பாரதியாரின் கவிதையிலேயே இலக்கணவழுக்கள் இருக்கின்றன என்று பறை சாற்றி வந்த பண்டிதர்களிடமும் அவர்களுடைய 'கொரடா' வாகிய இலக்கணத்தினிடமும், பெரும்பான்மைத் தமிழர்களுக்கு பயம். இந்த பயத்தினால், நூல் எழுதக்கூடிய சாமர்த்தியம் படைத்த அநேக தமிழர்கள், தமிழில் எதையும் எழுதத் துணியவே இல்லை.

தமிழில் அருமையாக எழுதும் சக்தி எத்தனையோ தமிழர்களிடம் அபரிமிதமாக இருக்கிறது. தங்களுடைய இயற்கையான சக்தி பலருக்குத் தெரியாமல் போய் விட்டால், தமிழ் நாட்டுக்கும் தமிழ் மொழிக்கும் எவ்வளவு நஷ்டம் உண்டாகும்!

பல நூற்றாண்டுகளாக, இந்தியர்களுக்கு, வாழ்க்கையில் பிடித்தம் இல்லாமல் போய் விட்டது. அடுத்த உலகப்பிரயாணத்தை, ஒவ்வொரு நிமிஷமும் வேண்டிக்கொண்டு, அதை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் ஜனங்கள், இந்த உலகத்தில் உருப்படியாக உயர்ந்த காரியங்களைச் செய்ய மனங்கொள்ளுவார்களா? 'சத்திரத்தில் சாப்பாடு; மடத்தில் நித்திரை' என்ற மனப்பான்மையோடு இருக்கும் மக்கள், தங்கள்

சொந்த சக்தியை அறிய முடியாமல் போய், எதற்கும் 'நம்மால் என்ன ஆகும்' என்ற பல்லவியை பாடத்துவக்கி விடுகிறார்கள்.

மேலும், இன்னொரு விசித்திரம் இருக்கிறது. கர்மத்துக்குப் பலன் உண்டு என்ற அருமையான இயற்கை உண்மையைக் கண்டுபிடித்தவர்களின் பரம்பரையில் தோன்றிய தற்கால தமிழர்கள், 'நான் ஒருவன் செய்வதால், என்ன ஆகப்போகிறது' என்று சொல்லி, தங்கள் ஆன்றோர்கள் கண்ட மகத்தான உண்மையை,பொய்யாக அடிக்கப் பார்க்கிறார்கள்.

வாழ்க்கையில் பிடிப்பும் பொறுப்பும் இல்லாமல் போகவே, நம்மவர்கள், சிறிய சங்கதியில் கூட, தோல்வி மனப்பான்மையுடன் வேலை செய்கிறார்கள். இந்த தோல்வி மனப்பான்மைதான் நம்மவர்களின் மனச்சோம்பலுக்கு முக்கியமான காரணமாகும். இந்த சோம்பலினால், நம்மவர்கள் எதையும் பற்றி யோசனை செய்ய ஆசைப்படுவதுமில்லை; முயற்சி செய்வதுமில்லை.

தமிழர்கள் சம்பந்தப்பட்ட வரையில், இந்த தோல்வி மனப்பான்மையை வெருட்டி அடித்தவர் பாரதியார். பாரதியாரோடு நெருங்கிப் பழகிய பாக்கியம், மற்ற தமிழர்களைக் காட்டிலும், எனக்கு அதிகமாக கிடைத்திருந்தபோதிலும், எஸ். ஆர். ஸ்ரீநிவாஸன் பாரதியாரைப்பற்றி

எழுதியிருக்கும் நடைச் சித்திரம் என்னை பிரமிக்கச் செய்து விட்டது. அவ்வளவு அழகான சித்திரம்! அவ்வளவு உண்மையான சித்திரம்! தராசு 'பொட்டை'த் தராசு அல்ல. நுட்பமான பொருள்களையும் 'முள் புராமல்' எடை போடும் தராசு!

இவ்வளவு அருமையான தராசை ஐசுவரியமாக வைத்துக் கொண்டிருக்கும் நண்பர் ஸி. ஆர். ஸ்ரீநிவாஸனுக்குக் கூட, 'தனக்கு சரியான படி தமிழில் எழுத வருமோ' என்ற நம்பிக்கை ஏற்படவில்லை. அவரால் தமிழில் அழகாக எழுத முடியும் என்ற நம்பிக்கை அவரது உள்ளத்தில் ஏற்பட்டதற்கு, ஒருவாறு நான் காரணம் என்பதை வெளியுலகத்தாருக்கு இன்று சொல்லி, சந்தோஷப்படுகிறேன். முன்னுரை நான் எழுத நேர்ந்ததற்கு, இதுதான் காரணம். வேறு எந்தக் காரணமும் இல்லை, இருகக முடியாது என்று என்னால் உறுதியாகச் சொல்ல முடியும்.

ஸி. ஆர். ஸ்ரீநிவாஸனுடைய வன்மை பொருந்திய தராசு, பனனிரண்டு பேர்களை எடை போட்டிருக்கிறது. இந்த டஜனில, எதை உயர்ந்தது, எதை அழகானது, எதை உணமையானது, எதை கூர்மையான பார்வையோடு இருக்கிறது என்று பிரித்துச் சொலல முடியவிலலை. ஒவ்வொருவரைப்பற்றியும சித்திரம்

அழகாய்த்தான் இருக்கிறது. சில சித்திரங்கள் விசித்திரமயமாய் இருக்கின்றன.

நண்பர் ஸ்ரீநிவாஸன், எடைபோட்டிருக்கும் பெரியார்களின் குணங்களையும் சாமர்த்தியங்களையும் மட்டும் சொல்லிவிட்டு, அவர்களுடைய குறைகளை மறைத்து விடவில்லை. ஸ்ரீநிவாஸன் தனது இணையற்ற ஹாஸ்யத் திறமையால் அவர்களுடைய குறைகளைக் கூட, குணங்களைப்போல சித்திரப்படுத்தியிருக்கிறார். வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்காரின் வரவுக்கு மிஞ்சி செலவு செய்யும் தன்மை அவரதுகுறை அல்லவா? அதை, நண்பர் ஸ்ரீநிவாஸன் 'ஔதார்யம்' என்று குறிப்பிட்டு, குணத்தைப் போல ஆக்கிவிடுகிறார். கோட்டுச் சித்திரத்தைக் காட்டிலும், வார்த்தைச் சித்திரம் மக்களை மயங்க வைக்கும் போலும்!

இயற்கையான பிராஸ நடை, நண்பர் ஸ்ரீநிவாஸனுடைய ஏக போக உரிமையாகும். வாசக நண்பர்கள், இந்த அழகான நடையை தராசு முழுதும், அனுபவித்துக் கொண்டே போவார்கள் என்பது நிச்சயம்.

'பணம் சேர, குணம் சரியும் என்பார்கள்,' 'கலா ஞானத்தை விட, கால ஞானம் மிகுந்தவர்,' 'மிதவாதம் என்றால் வாதத்தில் மிதமல்ல, வேகத்தில் தான் மிதம்', 'வாதத்திலே வேகமில்லை, ஆனால் விசை இருந்தது'—இவைகளைப்

போன்ற, ஆழ்ந்த சிந்தனை கொண்ட வாக்கியங்களை, பிரயாசை இல்லாமல் ஆனால் இயற்கையான பிராஸத்தோடு எழுதும் ஆற்றல் கொண்ட நண்பர் ஸ்ரீநிவாஸன், இந்தத் தராசோடு நிற்காமல், தமிழில் ஓயாமல் எழுதி, தமிழை, பிற நாட்டார் வணங்கும்படியாகச் செய்ய வேண்டும் என்பது எனது பிரார்த்தனை. அது தான் தமிழர்களுடைய பிரார்த்தனையாக இருக்க முடியும்.

வ. ரா.

"அறிவிலே தெளிவு, நெஞ்சிலே யுறுதி,
அகத்திலே யன்பினோர் வெள்ளம்,
பொறிகளின் மீது தனியர சாணை,
பொழுதெலா நினதுபே ரருளின்
நெறியிலே நாட்டம், கருமயோகத்தி
னிலைத்திட வென்றிவை யருளாய்,
குறிகுண மேதுமில்ல தாயனைத் தாய்க்
குலவிடு தனிப்பரம் பொருளே!"

—பாரதி

பொருளடக்கம்

1.	தராசு	1
2.	ஏ. ரங்கஸாமி ஐயங்கார்	6
3.	ஸி. ராஜகோபாலாச்சாரியார்	13
4.	எஸ். கஸ்தூரிரங்க ஐயங்கார்	22
5.	எஸ். ரங்கஸாமி	31
6.	எஸ். ஸ்ரீநிவாஸ ஐயங்கார்	41
7.	எஸ. ஸத்யமூர்த்தி	49
8.	ஸர் பி. எஸ். சிவஸ்வாமி ஐயர்	59
9.	ராவ்பஹதூர் ஜி. ஏ. நடேசன்	66
10.	வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார்	73
11.	ஸர் ஸி. பி. ராமஸாமி ஐயர்	80
12.	ஸி. சுப்ரமண்ய பாரதி	89

படங்களுடன்.

தராசு*

மகுடத்தைப் பார்த்து மருளவேண்டாம்! பாரதி புத்துயிர் பெற்று விடவில்லை. பெறவும் அவருக்கு ஆசை இராது. போன ஜன்மத்தில் பட்ட பாடு போதும்! கரும்புத் தோட்டத்திலே ஏழை மக்கள் பட்ட துயரத்தை அவர் வர்ணித்தார். தமிழ் நாட்டிலே அவர் பட்ட துயரத்தை யாரால் வர்ணிக்க முடியும்? உடல் வாடினால் தான் உயிர்மொழி ஓங்கும் என்று நண்பர் ஒருவர் சமாதானம் சொன்னார். திருவாழ்த்தான் தாயாருக்கு வைத்தியம் செய்த கதையை இது ஞாபகப்படுத்துகிறது.

* * * *

பாரதியைப் பற்றி எழுத இதை ஆரம்பிக்கவில்லை. 'தராசு' என்ற தலைப்பின் கீழ் பாரதியார் பல வியாசங்கள் எழுதினார். புதுவையிலிருந்து "மித்திர"னுக்கு வழங்கினார் — அதே மகுடம் இட்டு எழுதுகையில் அவர் ஞாபகம் வருவது சகஜந்தானே! ஏன் அந்த மகுடத்தை ஸ்வீகரித்தேன் என்று கேட்கலாம். உண்மையைச் சொல்லிவிடுகிறேன். நண்பர்கள் சிலர்

---

* 18-2-41 அன்று 'சுதேசமித்திரன்' வாரப்பதிப்பில் வெளிவந்தது

தொடர்ந்தாற்போல் வாரப்பதிப்பில் எழுத வேண்டுமென்று என்னை வற்புறுத்தினர்; ஸால்ஜாப்பு பலிக்கவில்லை; தொந்திரவும் தாங்க முடியவில்லை.

* * * *

சரி என்று ஒப்புக்கொண்டேன். நல்ல வேளை பார்த்து பேனாவைக் கையில் எடுத்தேன். எதைப்பற்றி எழுதுவது என்ற விசாரம் அப்பொழுது தான் தோன்றிற்று. எதில் ஆரம்பித்து எங்கே முடிப்பது? ஒன்றும் புலப்படவில்லை! மகுடமிட்டால் மயக்கம் தெளியும் என்று நினைத்தேன். யாரோ ஒருவர் பின்னால் நின்று எழுதுவதை எட்டிப்பார்ப்பதாகத் தோன்றிற்று. திரும்பிப் பார்த்தேன். ஒருவரும் காணவில்லை. ஆனால் ஆச்சர்யம்! கை ஓட ஆரம்பித்தது. தராசு என்ற தலைப்பை எழுதியது தான் தாமதம். கலகலவென்று சிரிப்பு காதில் பட்டது. திரும்பிப் பார்த்தேன். அகக் கண்முன் பாரதி பிரத்தியக்ஷம் ஆனார்.

* * * *

நெடுநாளையப் பழக்கம்! நெருங்கிய பழக்கம்! தராசு என்று எழுதினேன். பாரதியின் ஞாபகம் மனதில் உதித்தது. மனோவேகமாய் அவரும் வந்து விட்டார். என்ன விசேஷம்,

என்ன எழுதப்போகிறாய் என்றார். அது தான் தெரியவில்லை என்றேன். கவலைப்படாதே, பேனாவுக்குத்தெரியும் என்றார். அது எப்படி என்றேன். அநுபவத்தை யொட்டிச்சொல்கிறேன். புதுவையில் எழுதும்போது எனக்கும் இதே திகைப்பு தான், ஆனால் பேனா ஏந்திய கை மனதைத்துளைக்க ஆரம்பித்தது என்றார். தைரியம் பெறறேன். எழுதவும் தொடங்கினேன்.

*

தூராசில் பல வகை உண்டு. கொத்தவால் சாவடிக்குப் போனால் இதன் உண்மை புலப்படும். படிக்கல்லுக்கு படிக்கல் வித்தியாசம்; தட்டுக்குத் தட்டு வித்தியாசம். எடைக்கு எடை வித்தியாசம்; பேச்சுப் பராக்கில் சூது முடிந்து விடும். ஆளுக்குத் தகுந்தபடி பேச்சு; நயமும் பயமும் ஊசலாடும். அதட்டல், உருட்டல், மிரட்டல், பெரட்டல் எல்லாம் காணலாம். ஒரு முறை போய்ப் பாருங்கள்; அதில் லாபம் உண்டு; அனுபவம் வீண் போகாது. உலகத்தை அறியப் போதுமானது. உலகமே ஒரு கொத்தவால் சாவடி!

*

உலகம் பல விதம் என்பர். இதற்கு அர்த்தம் பல உண்டு. அறிவுக்கு எட்டியவாறு

அர்த்தம் செய்துகொள்ளலாம். அறிவுக்கு அரண் கிடையாது. ஆனால் அறிவைத் தீட்ட அநுபவம் தேவை. நவநாகரீகத்தைத் தழுவிய அநுபவநூல்கள் தமிழகத்தில் இன்னும் விசேஷமாகத் தோன்றவில்லை. கற்பனைக் கதைகள் பல வெளிவந்திருக்கின்றன. ஆனால் உரம் பெற்றவை அல்ல. அநுபவம் நிறைந்தால்தான் கற்பனை கதிர் விடும். அனுபவ முதிர்ச்சியை ஒருவரிடம் நன்றாகக் கண்டேன். காலம் செல்லச் செல்ல அவருடைய நூல்களின் பெருமை பெருகும் என்று எதிர்பார்க்கிறேன்.

* * * *

நான் குறிப்பிடும் நூலாசிரியர் காலஞ்சென்ற ராமாநுஜலு நாயுடு. ஆள் வாட்டம் சாட்டமாயிருப்பார். ஆனால் வசீகரமான வடிவம் அல்ல; பேசும்போது உடல் குலுங்கும்; முகம் கோணும். ரஸமாகப் பேசுவார்; நகைச்சுவை கவனிப்பாரற்று மிதக்கும். வாய்விட்டுச் சிரித்து நான் கண்டதில்லை. அடக்கிக்கொண்டு பேசும்போது அசடு சொட்டும். போதாக் குறைக்கு நல்ல டமாரச் செவிடு. கடைசி முறை நான் பார்த்தபோது எதிரும் புதிரும் உட்கார்ந்து கொண்டு எழுத்து மூலமாகப் பரஸ்பர யோகக்ஷேமங்களை விசாரித்துக் கொண்டோம். பகவத்-

சிருஷ்டியில எவ்வளவோ விநோதங்களைப் பார்க்கிறோம். ராமாநுஜலு நாயுடு அதற்கு ஒரு பிரத்தியக்ஷப் பிரமாணம்.

*   *   *   *

தெருவில் சந்தித்தால் அவருக்கு எழுதத் தெரியும் என்று யாரும் சொல்லமாட்டார்கள். ஆனால் அவர் ஆண்ட எழுதுகோல் அபார சக்தி வாய்ந்தது. அவருடைய அனுபவக் குறிப்புகள் "மித்திர"னில் அடிக்கடி வெளியாகியிருக்கின்றன. ஆழ்ந்த கருத்துகள் நிறைந்தவை; சுலபமான நடை; சுவை மிகுந்தவை; அன்றாட அநுபவத்தைப் படம் பிடித்துக் காட்டுபவை. அவருடைய கற்பனைகள் பிறர் காட்டிய வழியைப் பின்பற்றியவை அல்ல. கேவலம் மொழி பெயர்ப்பல்ல. சுயமாகத் தோன்றி, சுபாவத்தைத் தழுவி, சூர்ய கிரணங்கள் போல் ஜீவ சக்தி நிறைந்தவை. அநுபவ உலகத்திற்கு அவற்றை அளவுகோலாகக் கொள்ளலாம். பாரதியின் தராசு, ராமாநுஜலுவின் படிக்கல், இவை சஹிதமாக இன்று கடையைத் திறந்துவிட்டேன்.

2

ஏ. ரங்கஸாமி ஐயங்கார்*

கடை திறந்தாகிவிட்டது; கடையில சரக்கு ஒன்றுமில்லை; ஒரே ஒரு அறை கொண்டது. கண்ணாடியால் அலங்கரிக்கப்பட்டது; எங்கும் கண்ணாடி; கண்ணாடியில் பல விதம். நிலக் கண்ணாடிகள்; குழி போல் உட்கவிந்த கண்ணாடிகள்; கொப்புளம் போல் புறம் கவிந்த கண்ணாடிகள். ஒவ்வொரு கண்ணாடியிலும் வெவ்வேறு தோற்றம். நிலக் கண்ணாடியில் சுபாவமாகவும், குழிக் கண்ணாடியில் சுரைக் காய் போலவும், கொப்புளக் கண்ணாடியில் சுண்டைக்காய் போலவும் முகம் தோன்றும். மனிதனுடைய நிஜ ஸ்வரூபம் எது? புறத் தோற்றம் இவ்விதம் மாறின் உள் தோற்றம் எவ்வாறு இருக்கும்? அதை அறிவுறுத்தவே அறை அலங்கரிக்கப்பட்டது.

★ 23-2-41 அன்று 'சுதேசமித்திரன்' வாரப்பதிப்பில் வெளிவந்தது.

ஆவரியிலே ஒரு தராசுப்படம் தொங்குகிறது; வேறு தராசும் இல்லை; படிக்கல்லும் இல்லை. சூக்ஷ்மம் அதில் தான் இருக்கிறது. கடைக்குக் கடை தராசும் படிக்கல்லும் மாறுவதைக் கவனித்திருப்பீர்கள். சரக்கின் மதிப்பு ஏற ஏற தராசின் ஸைஸூம், படிக்கல்லின் பரிமாணமும் குறைகிறது. விறகுத் தொட்டியில் குண்டுக் கணக்கில் பேசுகிறார்கள். கொத்தவால்சாவடியில் வீசைக் கணக்கு; பந்தர் தெருவில் ராத்தல் கணக்கு; தங்கசாலைத் தெருவில் வராகன் கணக்கு. ரத்தின வியாபாரிகள் ரதிக் கணக்கு: வைர வியாபாரிகள் காரட் கணக்கில் பேசுகிறார்கள்; சாமான் சன்னம் ஆக ஆக, தராசின் தூய்மையும் தெளிவு ஆகிறது. காற்றுப் படாமல் கண்ணாடிக் கூண்டில் எடை போடுகிறார்கள். சந்தேகம் நீங்க மத்யஸ்த எடை கோருகிறார்கள்.

* * * *

நம் தராசிலே ஏறும் பண்டங்கள் உருக் காணாதவை; ஆனால் உயிர் உள்ளவை. அது எப்படி சாத்தியம்? சிறு உதாரணம் அதை விளக்கும். காற்று உண்டு: காற்றைக் கண்டவர் உண்டோ? புறக் கண்ணுக்கு புலப்படாதது அகக்கண்ணுக்குப் புலப்படும். அதை அளப்பதே இந்தத் தராசின் மகிமை. தராசு நிறைக்கு

ஆள் அகப்படுவது தான் கஷ்டம். அதிலும் ஆச்சர்யமில்லை. குறையில்லாதவனுக்கு பிறப்பு இல்லை என்பது மூதுரை. பாப சேஷமே புனர்-ஜனன ஹேது என்பது சித்தாந்தம். எனவே களங்கமற்ற சேவையைக் காண்பது அரிது. அதனாலேயே சேவைக்குள்ள சிறப்பும் அதிகம். குறையை நீக்கி குணத்தைக் காட்டும் 'எக்ஸ்ரே' கருவியாக நமது தராசைக் கொள்ளலாம்.

*　　　*　　　*　　　*

பீடிகை போதும்! விஷயத்தில் இறங்குவோம்.

சமஷ்டி கோர்ட்டில் காணும் சுறுசுறுப்-போடு நிற்குமோ என்று அஞ்சினேன். நல்ல வேளையாக ஆரம்பத்தில் நல்ல சரக்கு மதிப்பிட இடமேற்பட்டது. அன்று ரங்கஸாமி ஐயங்-கார் ஞாபக தினத்தைக் கொண்டாடினார்கள். அவரைத் தராசில் ஏற்ற ஆசை பிறந்தது. கூச்சம் ஒரு பக்கம், குசால் ஒரு பக்கம் போராடின. முடிவில் உண்மையை விளக்குவது கடமை என்று தீர்மானித்தேன். இடையே இன்னொன்-றும் தோன்றிற்று. ராம நாமத்தை ஜபிக்கிறவர்-களுக்கு இகபரசுகம் உண்டென்று சொல்லு-கிறார்கள். கேட்போருக்கும் பாதி பலன் உண்-டாம். அது உண்மையாயின் ராம பக்தனுக்கும் அது பொருந்தும். அடியாருக்கு அடியார்

அல்லவோ ஆண்டவன்! ரங்கஸாமி ஐயங்காரைப் பற்றி எழுதுவது இந்த தர்மத்தையும் அநுசரித்தது.

* * * *

ராமபிரானின் குணங்களைப் பற்றி பேசிக் கேட்டிருக்கிறேன்; மூன்றை முக்கியமாகக் குறிப்பிடுகிறார்கள். சௌசீல்யம், சௌலப்யம், சுவாமித்வம் என்பன அவை. ஒழுக்கத்தில் சிறந்தவர், சுலபமாய் நெருங்கக்கூடியவர், அருள் நிறைந்தவர் என்பது கருத்து. ரங்கஸாமி ஐயங்காரிடமும் இவை காணக்கிடந்தன. அனுக்ரஹ விசேஷத்திற்கு மாத்திரம் ஓர் உதாரணம் குறிப்பிடுகிறேன். தஞ்சை - திருச்சித் தொகுதியில் மத்திய சட்ட சபைக்குத் தேர்தல் நடந்தது. ரங்கஸாமி ஐயங்காருக்கும், சேஷகிரி ஐயருக்கும் மும்முரமான போட்டி; ஸ்ரீரங்கத்தில் ஓட் பதிவு செய்ய, கிழக்கோனார் ஒருவர் வந்தார். விஷயம் அறியாதவர்; விதரணை தெரியாதவர் ; கீரல் கையெழுத்து . யாருக்கு ஓட் செய்வது ? பாவம், ஒன்றும் புரியவில்லை. அபேட்சகரின் பெயர்களை திரும்பத் திரும்ப படிக்கச் சொன்னார். முடிவில் நம்மூர் ரங்கநாத ஸாமிக்கு ஓட் போடுங்கள் என்றார்! ரஸமான சம்பவம் அல்லவா ? ரஸம் மாத்திரம் தானா உங்களுக்குப் புலப்படுகிறது ?

ராக்

இல்லறம் அவர் நடத்தியதே ஒரு அதிசயம். திறந்த வீடு; யாரும் நுழையலாம். இரண்டு கால் நாயும் நரியும் நுழைந்ததுண்டு. அதற்கு அஞ்சிக் கதவைத் தாழிட்டதில்லை. யோசனை கேட்க சிலர் வருவர்; விஷயம் அறிய இன்னும் சிலர்; உத்தியோகம் தேடிப் பலர் வருவர்; உபகாரம் நாடி மற்றும் பலர்; இன்சொல்லும் இயன்ற சேவையும் செய்தார். பக்குவம் பெற விருப்பு வெறுப்பு விலகவேண்டும் என்பார்கள். ரங்கஸாமி ஐயங்கார் அதையும் கடந்தார். எல்லாரிடத்திலும் விருப்புண்டு; எவரிடத்திலும் வெறுப்பு இல்லை. எளியோரிடத்தில் இரங்குவர்; ஈவதில் கர்ணனுக்கு ஈடு. அகம்பாவம் அறியாதவர்; ஆடம்பரத்தில் ஆசை இல்லாதவர். பெயருக்கோ பெருமைக்கோ பாடுபட்டவர் இல்லை. கார்யத்தில் கண். கார்யம் ஊர்-கார்யம்; வாழ்நாள் முழுதும் பிறருக்கு முன் யோசனையும் பின் பலமும் தேடிக்கொடுத்தார். வாதம் நாணயமும் நயமும் கொண்டது. எதிராளியின் மரியாதையையும் மதிப்பையும் பெற்றார். செல்வநூல் சிறப்புடன் கற்றார். நாட்டின் செல்வத்தில்தான் நாட்டம். சொந்த அளவில் கருத்து இல்லை. சம்பாதித்தார்; செலவழித்தார். ஸம்சாரம் சமுதாய அளவு. பணம் சேரும் ஜாதகம் அல்ல.

* * * *

ஏ. ரங்கஸாமி ஐயங்கார்

படிப்பில் மேதை. பால்யமுதல் சாகுமளவும் படித்த வண்ணம் இருந்தார். வித்தைக்குத் தகுந்த விநயம். படிப்போரிடத்தில் பிரியம். ஊக்கம் காட்டியவருக்கு ஊட்டமளித்தார். கவர்ன்மெண்டு கார்யாலயத்தில் முதன் முதல் சேவைக்குப் புகுந்தார். சுவாதீன வாழ்வை மதித்து, அதை விட்டு வக்கீல் தொழிலில் இறங்கினார். தொழிலின் வரையறைகளைக் கண்டு கலங்கி, பத்திரிகாலயத்தில் நுழைந்தார். மனம் குளிர ஸேவை செய்தார். மானங்காத்து மகிமை யுற்றார். வானம் போற்ற வீரம் சொரிந்தார். சேவாதுரனுக்கு எல்லை ஏது? ஆங்கிலப் பத்திரிகையிலிருந்து தமிழ்ப் பத்திரிகைக்கு மாறினார். நகர சேவையுடன் கிராம சேவையிலும் ஈடுபட்டார். படித்தவர்களுடன் நிற்காமல் படிக்காதவருக்கும் பிரசங்கம் செய்யப் புறப்பட்டார். சேவாசக்கிரம் சுழன்றபோது அரசியல் துறையிலும் இறங்கினார். காலம் செல்லச் செல்ல நாட்டின் கவலையே அவரை வாட்டி வந்தது. உடல். பொருள், ஆவி அனைத்தையும் தத்தம் செய்தார். நாட்டின் விடுதலைக்குக் காலம் வரவில்லை. காலனின் கருணை அவருக்கு விமோசனம் அளித்தது.

* * * *

திராக்

தமிழ் நாடு தவம் புரிந்த நாடு! செய்நன்றி மறவாத நாடு? தமிழ்த் தாய்க்கு அழியாப் புகழ் தேடியவரின் ஞாபகம் மறையாது. ஞாபக தினம் கொண்டாடியது பொருத்தமானதே. நல்லாரை நினைப்பதும் நன்று; புகழ்வதும் பெருமை.



ஸி. ராஜகோபாலாச்சாரி

3

ராஜாஜி *

சக்கரவர்த்தி ராஜகோபாலாசாரியார்! வாய் நிறைந்த பெயர்! வட நாட்டினர் எதிலும் கெட்டிக்காரர்; பெயருக்கு இவ்வளவு நீளம் எதற்கு, வாயில் நுழைவதே கஷ்டமாக இருக்கிறதே என்று யோசித்தனர்: ராஜாஜி என்று அழைக்க ஆரம்பித்தனர். முதல் இரண்டு எழுத்துக்கள் அன்பைக் காட்டுகின்றன; மூன்றாவது எழுத்து மதிப்பைக் காட்டுகிறது. ஆறில் ஒரு பங்கு! மூன்றே எழுத்தில் முடித்து விட்டனர். தென் நாட்டிலும் ராஜாஜி என்ற பெயர் வழக்கத்திற்கு வந்துவிட்டது.

* * * *

பெயருக்கேற்ற ஆகிருதி இல்லை. கம்பீரமான தோற்றமும் இல்லை. ஆள் கச்சல்; ஒற்றை நாடி. முகத்தின் அழகு கண்ணில் என்பர்: கண்கள் உள் அடங்கியவை; வீங்கலானவை; விசை இழந்தவை; கண்ணாடி சகிதம் காண்-

---

* 9-3-41 அன்று 'சுதேசமித்திரன்' வாரப்பதிப்பில் வெளிவந்தது.

பவை; கண்ணாடியே ஒரு கவசம்; கருத்தின் குறி கண்ணில் காணலாம். அவரிடத்தில் அது சாயாது. கண்ணாடி பூட்டிய கண்கள் பிறரைப் பார்த்தன; பிறர் பார்க்க இடம் தரவில்லை. கருப்புக் கண்ணாடிகள்! முகம் முக்கோண வடிவு. மண்டை பெரியது. நெற்றி விசால-மானது. கருட மூக்கு. வாடிய கன்னங்கள். அகன்ற வாய். ஒடுங்கிய உடல். நீண்ட கரங்கள். விருவிருப்புக்காட்டும் விரல்கள். சற்றே கூனல் காட்டும் முதுகு. வார்த்திகத்தின் விளைவா? விநயத்தின் வளைவா? இடுப்பிலே பஞ்ச கச்சம். உடலை மூட ஒரு பனியன்; அதன் மீது ஒரு ஜிப்பா; இடது தோளில் மடிப்புக் கலையாத ஒரு வேஷ்டி. காலிலே செருப்பு.

* * * *

சந்தையில் கண்டால் சரக்குள்ளவர் என்று யாரும் நினைக்க மாட்டார்கள். உள் ஆளை அறியப் பழகவேண்டும். குண சீலர். ஒழுக்கம் உள்ளவர். அச்சம் அறியாதவர். மனோதைர்யம் மிகுந்தவர். உள்ளத்தின் வலுவே உடல் வலுவு. தனித்து நிற்கும் சுபாவம்: தன்னம்பிக்கை அதிகம். தன் கையே தனக்கு உதவி என்று நினைப்பவர். ஏற்ற காரியத்தை அடி முதல் நுனி வரையில் தானே செய்வார். சக்தி வாய்ந்த நல்ல சாணை பிடித்த மூளை. மதியால் விதியையும்

வெல்ல முயல்பவர். சந்தேகப் பிரகிருதி! யாரை-யும் எளிதில் நம்பார். நம்பினாலும் நெருங்க விடார். நெருங்கினாலும் அந்தரங்கம் காட்டார். பிறரிடம் பற்றோ பாசமோ வைப்பவர் அல்ல. தட்டிக்கொடுத்து,தூக்கி வைத்து,வேலை வாங்கத் திறன் போதாது. தொடருவோருக்கு அவரிடம் மதிப்பு உண்டு; மரியாதை உண்டு; ஆசை இல்லை; அன்பு இல்லை; அவரும் எதிர்பார்க்க வில்லை.

*   *   *   *

பார்க்கும் போதெல்லாம் புன்சிரிப்புப் பூத்த முகம். பேச்சில் சமர்த்தர். ஆழம் தட்டாத பேச்சு! பிரசங்கத்திற்கு வேண்டிய நாதமோ நயமோ கிடையாது. இருந்தாலும் மணிக்கணக்கில் பேசப் பக்குவம் பெற்றவர். கேட்போரைப் பரவசப்படுத்த சக்தி இல்லை. ஆனால் மனம் குளிரப் பேசுவார். கதை சொல்-வதில் பிரியம். பிரதிப் பிரசங்கத்திலும் கதை-களைக் கேட்கலாம். எங்கிருந்தோ ஏதேதோ கதைகள் கிளம்பும். வற்றாத ஊற்று. ஒரொரு சமயத்தில் பொருத்தம் அவ்வளவு புலப்படாது. முழங்காலுக்கும் தலைக்கும் முடிச்சுப் போட்டு, கதையைக்கட்டி விடுவார். இருந்தாலும் விரஸம் தட்டாது. கதை கேட்கும் ஸ்வாரஸ்யத்தில் பொருத்தத்தை யார் கவனிக்கிறார்கள்? கதை

சொல்லிச் சொல்லி, பிரசங்கம் நீண்டு கொண்டே போகும். பொழுது போவது தெரியாது. தொண்டைத் தண்ணீர் வற்றும் வரையில் பேசித் தீர்ப்பார். எப்பொழுதும் இப்படிப் பேசுபவர் அல்ல. கூட்டம் இடம் கொடுக்க வேண்டும்: குஷி பிறக்க வேண்டும்: தாய் பாஷையில் பேச வேண்டும்: தாய் முறை தானாக வந்துவிடும்.

* * * *

வாதத்தில் வில்லாதி வில்லன். எதிராளியின் பலம் அறிந்தே பேசுவார். அதைப் பழித்துக் கழித்து, பிறகே தன் பலம் காட்டுவார். நுண்ணிய அறிவு. சிக்கலான பிரச்னைகளைச் சுலபமாக விளக்குவார். சேலத்தில் வக்கீல் தொழிலை ஆரம்பித்தார். அப்பொழுது அங்கே சக்கரவர்த்தி விஜயராகவாசாரியார் பெரிய கை. அரும் தொண்டாற்றிப் பெரும் புகழ் பெற்றவர். அவர் முன் எதிர்வாதம் புரிவது எளிது அல்ல. இருந்தாலும் இளைய சக்கரவர்த்தி சளைத்தவர் அல்ல என்று காட்ட அதிக காலம் ஆகவில்லை. இரண்டு சக்கரவர்த்திகளும் எதிரும் புதிரும் வாதாடும்போது கோர்ட்டில் கூட்டம் கூடிவிடும். கவனிக்க ரஸமாயிருக்கும் என்று சொல்லக் கேட்டிருக்கிறேன். இருவர் சுபாவத்தையும் அறிந்தவர் அதில் ஆச்சர்யப்படுவதற்கில்லை. பெரியவர் ராஜ பாட்டையில் செல்வார். இளையவர்

லயங்கரையோரமாகச் சென்று வளைத்துக் கொள்வர். கோர்ட்டில் இருவரிடத்திலும் நல்ல மதிப்பு உண்டு; இளையவரிடத்தில் சற்று பயமும் உண்டு. வக்கீல் தொழிலில் நல்ல பிராபல்யம் பெற்று போதிய வருமானமும் கிடைத்து வந்தது. ஆனால் சேலத்திலேயே வாழ்நாள் முழுமையும் கழிக்க ராஜாஜி பிரியப்படவில்லை. பல துறைகளில் ஈடுபட்டு உழைத்தும், உள்ளத்திலுள்ள ஊக்கத்திற்கும் உத்சாகத்திற்கும் வசதி போதவில்லை. சமூகச் சீர்திருத்தத்தில் தைரியமாக இறங்கினார்; முனிசிபல் நிர்வாகத்தை திறம்பட நடத்திக்காட்டினார். கூட்டுறவு இயக்கத்தில் பங்கெடுத்துக்கொண்டார். போதவில்லை. ராஜீயத்துறையில் வசதி காணவில்லை. கருணைக் கடலின் காலடி தேடி சென்னைக்கு வந்து சேர்ந்தார்.

* * * *

வந்த வேளை நல்ல சுதப காலம். அரசியல் திட்டம் அந்தரத்தில் இருந்தது. அடக்கு முறைத் திட்டம் அம்பலத்திற்கு வந்து விட்டது. சத்ய சோதனையும் சிரோதயம் பெறும் பக்குவம். காந்தி அடிகள் சென்னைக்கு வந்திருந்தார். திலக பவனத்தில் தங்கியிருந்தார். காலையிலும் மாலையிலும் பல தலைவர்கள் அங்கு கூடிக்கூடிப் பேசினர். அவர்கள் முன்னிலையில் தான் சத்யாக்ரக

தர்மத்தை சித்தாந்தம் செய்தார் மகாத்மா. அப்பொழுது அதன் மகிமையைப் பலரும் அறிய வில்லை. விதை பிறக்கவில்லை. சூக்ஷம அறிவு படைத்த ஒருவருக்குத்தான் வருங்கால வாசனை வீசிற்று. அவர் தான் ராஜாஜி. காந்தியைக் குருவாக வரித்து, அவரிடம் பரன்யாஸம் செய்து கொண்டார். காலசக்கரம் சுழன்று பலமும் திரண்டது. அம்ருதஸரஸில் கண்ட வெள்ளம் கல்கத்தாவில் கரை புரண்டு ஓடிற்று. முன் பின் யோசியாது அந்த வெள்ளத்தில் குதித்த பெருமை ராஜாஜிக்கு உரித்தாகும். பரம்பரைப் பணக்காரர் அல்ல; சம்பாதித்துச் சேமித்தவரும் அல்ல. சம்சாரி: இளம் குடும்பம். ஆனால் ஒன்றையும் கவனிக்கவில்லை. தொழிலை விட்டுத் துறவரம் பூண்டார். ராஜீய சேவையில் முற்றி லும் ஈடுபட்டுவிட்டார். காந்தியுடன் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டு, சத்யாக்ரக தர்மங்களை கசடறக் கற்றார். கற்றதில் ஒரு ஊனம். அகங் காரம் அகலவில்லை. ஆத்ம சமாப்தி பூர்த்தியாக வில்லை. குருவிடம் பேசிய தெய்வம் அவரிடம் பேசவில்லை. குருவின் உபதேசங்களுக்கு அறிவையொட்டியே அர்த்தம் கொண்டார். அதனால் திகைக்கவும் திணறவும் நேர்ந்தது. உப தேசங்கள் உபயவாதங்களுக்கு இடம் தந்தன. மெய் எது, மாயை எது என்று அறிய பக்குவம்

போதவில்லை. காங்கிரஸிலிருந்து சுயராஜ்யக் கக்ஷி முளைத்த சமயத்தில் அவருக்கேற்பட்ட சோதனை அது தான். வாதம் பிடிவாதமாக மாறியதை மகாத்மா ஆதரிக்கவில்லை. சுய-ராஜ்யக் கக்ஷிக்கு வழி விட்டபோது, நிர்மாணத் திட்டத்தில் நிம்மதி பெற திருச்செங்கோடு ஆசிரமத்தில் புகுந்தார் ராஜாஜி.

* * * *

பொறுத்தவர் பூமியாள்வர். மீண்டும் சத்யாக்ரகப் போர் துவக்கியபோது, ராஜாஜி சுதாவாகவே தென் நாட்டுத் தலைவ-ராகத் துலங்கினர். இடைக் காலத்தில் பக்குவம் பெற்று மனப்போக்கே பெரிதும் மாறிவிட்டது. பொறுமை பெருகி ஆசை அடங்கிவிட்டது. கடமையாகக் கருதி கடனை ஏற்றார். சமாதானம் ஏற்பட்டதும், சலிப்பும் சோர்வும் மேலிட்டன. ஆத்மார்த்தமாகவும் அக்ஞாதவாசத்தில் பரிவு பிறந்தது. விலகிக்கொண்டார். வினை விடவில்லை. கர்மயோகிகளுக்கு ஓய்வு ஏது, ஒழிவு ஏது? தேர்தலில் ஈடுபடவேண்டி வந்தது. வெற்றி கிடைத்தது. பொறுப்பும் வளர்ந்தது. பதவி ஏற்றார். பொறுப்பு பெருகிக்கொண்டே போயிற்று. நாள் ஒன்றுக்கு 24 மணி நேரம் போதவில்லை. ஏற்ற வேலையை ஏறப் பார்ப்பதே சுபாவம். நுணிப்புல் மேய்பவர் அல்ல. நிர்வாக

அநுபவம் குறைவு. பொறுப்பு ஏற்பட்டதும் உள்ளும் புறமும் புதிதாகத் தோன்றின. சேவைக்குப் பல துறைகள் புலப்பட்டன. தொடர்ந்த திட்டம் வகுத்துக்கொண்டு, திட-சித்தத்துடனும் தீர்க்க தரிசனத்துடனும் காரியத்தில் இறங்கினர். தாழ்ந்தோரைத் தூக்குவதில் திருஷ்டி. குடியை யொழித்து, கடனைக் கழித்து, கௌரவத்தைக் காக்க முற்பட்டார். செலவை ஒடுக்கி, வரியை உயர்த்தி, வசதி தேடிக்கொண்டார். எதிர்ப்பு ஏற்படுவது சகஜம். மதிக்கவில்லை. சேவாதுரத்தில் ஹிதம் கூறுவோரையும் புறக்கணித்தார். காலபலம் இருந்தால் காலக்கிரமத்தில் நிலைமை தெளிந்திருக்கும். அதற்கு அவகாசம் இல்லை. அதிகாரத்தைத் துறக்க நிர்ப்பந்தம் பிறந்தது.

* * * *

அதிகாரத்திலிருந்து விலகுவதில் ராஜாஜிக்குப் பிரியமில்லை. அதிகாரப்பித்து அதற்குக் காரணம் அல்ல. மக்களை மீண்டும் சோதிக்கக் காலம் வரவில்லை என்பதே அவர்கருத்து. தவிர்க்க வெகு சிரமப்பட்டார். காலம் கூடிவரவில்லை. ராஜிநாமாச் செய்தார். நிலைமை தெளியவில்லை. சம்மதமில்லாமல் சிறையும் புகுந்தார். மேற்கொண்டு என்ன நடக்கப்போகிறது? வருங் காலத்தை யார் வகுக்க முடியும்? ஒன்று மாத்

திரம் நிச்சயமாகக் கூறலாம். மீண்டும் பதவி ஏற்க வழி பிறந்தால் ராஜாஜியை விட நல்ல மந்திரி அகப்படுவது கஷ்டம். அவருடைய அந்தரங்க சுத்தியில் என்றைக்கும் யாருக்கும் நம்பிக்கை உண்டு. அறிவையொட்டி அலசிப் பார்த்து தியாகம் செய்தவர். தன்னலமறுத்த சேவையில் தங்கு தடை தட்டாதவர். குறைகள் இருக்கலாம். யாரிடம் இல்லை? அரும்பெரும் குணங்கள் அவரிடம் காணக்கிடக்கின்றன. அவை போற்றற்குரியவை.

4

எஸ். கஸ்தூரி ரங்க ஐயங்கார்★

ராயப்பேட்டையில் கஸ்தூரி ரங்க ஐயங்கார் பெயர் பூண்ட இலவச வாசகசாலை ஒன்று உண்டு. நகர சபையின் கைங்கர்யம்; அதில் அப் பெரியாரின் உருவப்படமொன்றைத் திறந்து வைக்க ஏற்பாடு செய்யப்பட்டது. திறக்கும் விழாவிற்குச் சென்றிருந்தேன். சற்று ஏமாற்றமுற்றேன். கூட்டம் மைதானத்தில் நடந்தது. காலை வெய்யில்; நிழல் இல்லை. ஒரு மூலையில் சிலர் கூடி இருந்தனர். 50 பேருக்குள் இருக்கும். பெரும் பான்மையோர் பேட்டையில் வசிக்கும் பாலர்கள். பேச வந்த 4, 5 பேர்களைத் தவிர உருப்படியாக வேறொருவரும் காணவில்லை. இது ஞாபகத்தைப் பெருக்கவா, பழிக்கவா என்ற சந்தேகம் எழுந்தது. ஐயங்காரை அறிந்தவர்கள் ஆயிரக்கணக்கில் இந்த ஊரில்

★ 16-3-41 அன்று 'சுதேசமித்திரன்' வாரப்பதிப்பில் வெளிவந்தது.

எஸ். கஸ்தூரிரங்க ஐயங்கார்

இன்னும் இருக்கிறார்கள். உற்றார் உறவினர் நூற்றுக் கணக்கில் இருக்கிறார்கள். கூட்டத்தில் மாத்திரம் யாரும் காணவில்லை! ஞாபகமறதியா? விளம்பரக் குறைவா? எதுவாயிருந்தாலும் பெருமைப்படுவதற்கில்லை. போகட்டும்! பேசியவர்களாவது வாயாரப் புகழ்ந்தார்களே என்று சற்று ஆறுதல் அடைந்தேன். பேச்சும் பத்திரிகைகளில் உசிதமாக வெளிவந்ததைக்கண்டு மகிழ்ந்தேன். வெளியூர்களுக்கு நினைப்பூட்ட அது போதும்.

*　　*　　*　　*

கஸ்தூரி ரங்க ஐயங்கார் என்றால் 'ஹிந்து' பத்திரிகையே ஞாபகத்திற்கு வருகிறது. அவருடைய பூர்வாச்ரமத்தை அறிந்தவருக்கு கூட அதற்கு முன் ஞாபகம் எழுவதில்லை. கள்ளிக்கோட்டையில் இரண்டொரு வருஷம் ஸப்-ரிஜிஸ்டிராராக இருந்தார். அதை மிகச் சிலரே அறிவர். கோயமுத்தூரில் பத்து வருஷங்களுக்கு மேல் வக்கீல் தொழில் நடத்தினார். அதையும் பலர் அறியார். சென்னை ஹைகோர்ட்டில் பல வருஷங்கள் 'பிராக்டிஸ்' பண்ணினார். அதைப்பற்றியும் ஞாபகம் எழுவதில்லை. பத்திரிகைத்தொழிலில் ஈடுபட்ட பிறகே அவருக்குப் பிராதான்யம் ஏற்பட்டது. பத்திரிகைக்கும் அவரால் தான் பிராபல்யம் ஏற்பட்டது. பத்-

திரிகை பல வருஷங்களாக நடந்து வந்தது. வெள்ளி விழாவையும் கொண்டாடி விட்டது. பருவத்திற்கேற்ற பலம் மாத்திரம் பெறவில்லை. ஆட்டம் கொடுத்துக் கொண்டே வந்தது. நிலைத்து விடும் என்று உள்வயணம் அறிந்தவர்கள் நினைக்கவில்லை. அதனால் தான் அபரவயதில் அநுபவமில்லாமல் ஆழம் தட்டாத குளத்தில் காலை விடவேண்டாமென்று பலர் சொன்னார்கள். கஸ்தூரி ரங்க ஐயங்கார் கேட்கவில்லை. சமூக சேவையில் என்றைக்கும் அவருக்கு சிரத்தை உண்டு. கோயமுத்தூரிலும் அதன் சாயை காணக் கிடந்தது. மனதிற்கு இசைந்த துறை துலங்காது தவித்துக்கொண்டிருந்தார். பத்திரிகையொன்று வலுவில் வந்தபோது பகவத் சங்கல்பமெனக் கருதினார். தயங்காது தைர்ய லக்ஷ்மியை வரித்தார்; தனலக்ஷ்மியும் தொடர்ந்து வந்து விட்டாள்.

* * * *

ஐயங்கார் பார்க்க அங்கமாயிருப்பர். கம்பீர மான தோற்றம். வசீகரமான உருவம். முக விலாஸம் மிகுந்தவர். ஸதஸிற்கேற்ற புருஷர். நடையுடை பாவனைகளில் கருத்துள்ள-வர். கூட்டத்தில் குறிப்பிடாமல் இருக்க முடி-யாது. ஆனால் பேச முன்வரமாட்டார். காரணங்கள் பல. முதலாவது, குரல் எட்டாது!

மெல்லிய குரல்; பலருக்குக் கேட்காது. இரண்டாவது, பேச்சும் தடுமாறும். கோர்ட்டில் பேசுவது வேறு, மேடை யேறிப் பேசுவது வேறு; பழக்கம் இல்லை. போதாக்குறைக்கு பரம சங்கோசி. அதனால் தான் ஆபீசிலும் வீட்டிலும் கூட மௌனசாமியாயிருந்தார். அவர் வாயிலிருந்து பேச்சைப் பிடுங்குவது மகா சிரமம். அரை மணி நேரம் பேசினால் அரை வார்த்தை பதில் வரும். ஸ்ரீமான் ஸ்ரீனிவாஸையங்காருக்கு சரியான மாற்று என்று சொல்லலாம். அவருக்குக் கேட்க ஆள் வேண்டும்; இவருக்குப் பேச ஆள் வேண்டும். இந்தக் கூச்சம் காரணமாக யாரிடமும் நெருங்கிய பழக்கம் கிடையாது. வீட்டிலே குழந்தைகள் கிட்ட வர அஞ்சும். ஆபீஸிலே சுவாதீனமாகப் பேசத் தயங்குவர். கிளப்பிலும் கலகலப்பில்லை. கூச்சம் குணத்தையும் காண விடவில்லை. பொது வாழ்வில் பங்கு எடுக்க நிர்ப்பந்தம் பிறந்த பிறகே, கூச்சம் கொஞ்சம் தெளிய ஆரம்பித்தது. கூச்சம் தெளியத் தெளிய, குணம் பிரகாசித்தது. பழகப் பாத்திரமானவர் என்பதைப் பலர் அறிந்தனர். பழகியவர்களும் பற்றும் பிரேமையும் கொண்டனர். ஐயங்காரிடத்தில் காணக்கிடந்த முக்கிய குணம் அவருடைய தைரியம் தான். அஞ்சாத நெஞ்சு. கருத்தில் மாத்திரம் தைரியமென்று

இல்லை! கார்யத்திலும் தைர்யம். தைர்யமே அவர் ஆண்ட எழுது கோலின் மசி. எழுதுகையில் தயவு தாக்ஷிண்யம் குறுக்கிடாது. தர்மம் ஒன்றே எழுத்துக்கு அவர் கொண்ட வரம்பு.

*　　*　　*　　*

அன்று அவர் செய்த சேவையை இன்று ஆராய, காலக் கண்ணுடி வேண்டும். பத்திரிகைப் பொறுப்பை அவர் ஏற்றபோது பொதுக் கார்யத்தில் யாருக்கும் சிரத்தையில்லை. படிப்பாளிகள் பொதுஜனசேவையைப் பொழுது போக்காகக் கருதினர். படிக்காதவர்களுக்கு அதுகூட இல்லை. சமூக சேவையே வாழ்வின் லக்ஷியம் என்று யாரும் கருதவில்லை. குறைகளுக்கோ குறைவில்லை; ஆனால் குறி காணவில்லை. கூர் காட்டவில்லை. குறைகளைக் குத்திக் கிளப்பி, கிளர்ச்சிக்குக் கூர் கட்டும் கடமை பத்திரிகைகளின் ஏகதேச பொறுப்பாகிவிட்டது. பத்திரிகைகளுக்கோ பின் பலமில்லை. பத்திரிகைகளைப் படிப்போர் மிகக்குறைவு: பணம் கொடுத்து வாங்குவோர் இன்னும் குறைவு. பத்திரிகை நடத்தப் போதிய வருமானம் இல்லை. திறம்பட நடத்தத் தென்பு ஏது? ஐயங்கார் கைக்கு "ஹிந்து" பத்திரிகை மாறிய போது இருந்த நிலைமை இது தான். ஆயிரம் சந்தா கூட இல்லை.

சந்தா இல்லாமல் விளம்பர வருமானம் எதிர்பார்ப்பதற்குமில்லை. இவ்வளவையும் அறிந்தும் ஐயங்கார் அதில் இறங்கியது தான் விசேஷம். பணக்காரர் அல்ல; ஏதோ பரிக்ஷை பண்ணிப் பார்த்தார் என்று நினைக்கவும் இடமில்லை. கையிருப்பு கொள்முதலுக்குப் போதாமல் கடன் பொறுப்பும் ஏற்றுக்கொண்டார். துணிச்சலுக்கு காவு கொடுத்து முதல் பத்து வருஷங்கள் அவர் பட்ட பாடு சொல்லத்தரமில்லை. முதல் வருஷக் கணக்கை முடித்துப் பார்த்த போது வருஷம் பூராவுக்கும் அவருக்கு எஞ்சிய வருமானம் 150 ரூபா தான்! பணப் பொறுப்பைப் பகிர்ந்து கொள்ள முதலில் முன் வந்தவர்கள் கழற்றிக் கொண்டு விட்டனர். இவ்வளவுக்கும் ஐயங்கார் கலங்கவில்லை. வாட்டம் காட்டவில்லை. பிகு தளரவில்லை. ஆனால் கெட்டிக்காரர் அல்லவா? பணத்தின் அருமையைக் கண்டு கொண்டார். பணத்திலே பிடிப்பு பிறந்தது; செலவிலே சிக்கனம்; கணக்கிலே கண்காணிப்பு; இவை கடைசி வரையில் மறையவில்லை. அவசியம் நீங்கியும் பழக்கம் மாறவில்லை.

* * * *

காலசக்கரம் சதாகாலம் சுழன்று வருகிறது அல்லவா! பத்திரிகைகளைச் சோதித்து, செல்வாக்கு அளிக்க நேரம் நெருங்கிவிட்டது.

காங்கிரஸ் லக்ஷியத்தை தேடிக்கொண்டது. சேவார்த்திகள் செல்வாக்கு தேட ஆரம்பித்தனர். சுதேசி இயக்கத்தின் சுழல் நாடெங்கும் பரவிற்று. பத்திரிகைகளுக்கு எல்லாம் சோதனை காலம்; ஆனால் ஒரு அனுகூலம்; சோதனையில் தேறியவர்களுக்கு செல்வாக்குப் பிறந்தது. பரீக்ஷையில் முதல் வகுப்பில் தேறினார் ஐயங்கார்! ஆழ்ந்த அரசியல் ஞானம் பெற்றவர். வக்கீல் முறையில் ஆதாரங்களுடன் வாதிக்க வல்லவர். நாட்டின் விடுதலைக்கு வகாலத்து வாங்கிக் கொண்டார். நியாயத்தை நேர்மையாக எடுத்துக் கூறினார். வாதத்திலே வேகமில்லை! ஆனால் விசை இருந்தது. மறுக்க முடியவில்லை: மடக்கவும் முடியவில்லை. நாள் ஆக ஆக, பத்திரிகையின் செல்வாக்கு அதிகரித்துக்கொண்டே போயிற்று. செல்வாக்கைச் செல்வம் தொடர்ந்தது. மகா யுத்தம் முடியுமுன் அசைக்கமுடியாத நிலைமையைப் பத்திரிகை அடைந்துவிட்டது. கடன் சுமை கழிந்து, பணம் குவிய ஆரம்பித்தது. சொந்த அளவில் கவலை தீர்ந்தது. நாட்டளவிலோ நிலைமை தெளியவில்லை. என்ன செய்வது? பத்திரிகைக்காரர்கள் ராஜீய இயக்கங்களில் கலப்பதை ஐயங்கார் விரும்பவில்லை. கக்ஷி பேதங்கள் காலக்கிரமத்தில் எழும், காய்தாவும் கட்டுப்பாடும் தொடரும், பத்திரிகைகளின்

எஸ். கஸ்தூரி ரங்க ஐயங்கார்

சுவாதீனம் மறைந்து விடும் என்று அஞ்சினார். ஆனால் காலம், விலகி நிற்க இடம் தரவில்லை. கலந்து கொள்ள முன்வந்தார். சுபாவம் இடம் கொடுக்கவில்லை. பட்டும் படாமலும் தாமரை இலை தாங்கிய தண்ணீர்த் துளிபோல் தவித்தார். பத்திரிகை ஒன்றே அவருக்கு ஏற்ற துறை. பத்திரிகை வாயிலாக அவர் செய்த சேவை என்றைக்கும் நிலைக்கும்.

*   *   *   *

பத்திரிகைத் தொழிலுக்கே பெருமை ஏற்பட்டது அவர் காலத்தில் தான்; பெரும்பாலும் அவருடைய முயற்சியே அதற்குக் காரணம். எழுத்தில் பாரபக்ஷமில்லை; வேண்டியவர்களைத் தூக்கவில்லை; வேண்டாதவர்களை இறக்கவில்லை; தயவு தாக்ஷிண்யத்திற்கு அஞ்சிப் பொறுப்பை கழிக்கவில்லை; ஆதாரங்களை ஆராய்ந்தே ஆதரவு காட்டினார். வலுச் சண்டைக்குப் போகவில்லை; வம்புச் சண்டைக்கு அஞ்சவில்லை. இரண்டொரு முறை கோர்ட்டில் வழக்காடவேண்டி வந்தது. பல முறை சிநேகத்திற்குப் பங்கம் வந்தது. அதிகாரிகளும் சல சலப்புக் காட்டினர். எதற்கும் பின்வாங்கவில்லை. அவர் காட்டிய கண்ணியமான போக்கு பத்திரிகையின் அஸ்திவாரத்தை பலப்படுத்திற்று. இன்னொன்று; ஜனங்களுக்கு பொது வாழ்வில் அக்கரை பிறக்க வழி

காட்டியதும் அவர் தான். வெளியூர் வர்த்த மானங்களுக்குப் பத்திரிகையில் வியாபகம் கொடுத்தார் அவர். படிக்க ருசியைப் புகட்டினார். உபயவாதங்களை விளக்கிக் கூறினார். முடிவு கட்டும் பொறுப்பை வாசகர்களிடம் பெரும் பாலும் ஒப்படைத்தார். கேவலம் பிரசார பூர்வமாகத் தன் கடமையை வகுக்கவில்லை. அதனால் தான் பத்திரிகை நேர்மையும் நிலையும் பெற்று, பெயரும் புகழும் அடைந்தது. 'வங்காளி' பத்திரிகை ஒரு காலத்தில் நல்ல செல்வாக்கு பெற்றிருந்தது. 'நியூ இந்தியா' பத்திரிகை சிறிதுகாலம் ஓங்கி நின்றது. இன்றைக்கு இரண்டு பத்திரிகைகளும் இருந்த இடத்தை விளக்கு வைத்துத் தேடவேண்டும். "ஹிந்து" பத்திரிகை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமாக வளர்ந்து கொண்டே வருகிறது. ஜனங்களின் ஆதரவை மேன்மேலும் பெற்று, கவர்ன்மெண்டின மதிப்பு நாளுக்கு நாள் விசத மாக விளங்கி நிற்கிறது. காரணம் என்ன? கஸ்தூரி ரங்க ஐயங்கார் காட்டிய வழி. அவர் வளர்த்த பத்திரிகையே அவர் செய்தசேவையின் சிறப்புக்குச் சான்று.

எஸ். ரங்கஸாமி

5

எஸ். ரங்கஸாமி*

அன்று கஸ்தூரி ரங்க ஐயங்காரைப்பற்றி எழுதினேன்; அதற்கு முன் ரங்கஸாமி ஐயங்காரைப்பற்றி சிறிது எழுதினேன். அந்தப் பரம்பரையில் இன்னும் ஒருவர் பாக்கி, அவரைப்பற்றி ஏன் எழுதவில்லை என்று கேட்க ஆரம்பித்துவிட்டார்கள்! கரும்பு தின்ன, கூலியா வேண்டும்? ரங்குவைப்பற்றி எழுத எனக்குத் தூண்டுதல் தேவையில்லை. நன்றாகத் தெரியும்; நெருங்கியும் பழகி இருக்கிறேன்; மதிப்புக்கு முற்றிலும் பாத்திரமானவர். ரங்கு என்றால் யார் தெரிகிறதோ இல்லையோ? எஸ். ரங்கஸாமி ஐயங்கார்! கஸ்தூரி ரங்க ஐயங்காரின் ஜேஷ்ட பிராதா திவான் பஹதூர் ஸ்ரீநிவாஸ ராகவை-யங்காரின் கனிஷ்ட குமாரன். கஸ்தூரி ரங்க ஐயங்காருக்குப் பிறகு "ஹிந்து" பத்திரிகையின் ஆசிரியராயிருந்தவர். ஆனால் மூன்று வருஷம் முழுதாக வேலை பார்க்கவில்லை. அல்ப ஆயுசு;

★ 6-4-41-அன்று 'சுதேசமித்திரன்' வாரப்பதிப்பில் வெளிவந்தது.

கஷ்ட ஜாதகம்; வாழ்நாளில் சுகம் காணுதவர் ஆனால் என்ன பேனு தாங்கினுர் அவர்! அவரை ஒருவரும் அறியமாட்டார். அவர் எழுத்தை அறியாதவர் ஒருவருமில்லை. வியக்கத்தக்க வன்மை வாய்ந்த எழுதுகோல். பேனு முனையிலிருந்து நவரஸம் தாரை தாரையாகப்பெருகிற்று. பேனு பெரியதா, கத்தி பெரியதா என்ற விசாரணை வெகுகாலமாக உண்டு. அவர் எழுத்தைப் படித்தவர் சந்தேகம் கொள்ள இடமில்லை. அவர் ஆண்ட பேனு ஆயுதக்களஞ்சியமாகத் துலங்கிற்று. நினைத்த மாத்திரத்தில் கத்தி போல் வெட்டியும், ஈட்டி போல் குத்தியும், கோடாரி போல் பிளந்தும், துப்பாக்கி போல் சுட்டும் தள்ளிற்று. இவ்வளவும் அன்னிய பாஷையில்! அடேயப்பா! என்ன பேனு அது!

*   *   *   *

மயிலாப்பூரிலே லஸ் சர்ச் ரோட்டு தெரியுமா? அத் தெருவுக்கு ஆதிமுதல் அலாதி யோகம். செல்வச் சீமான்கள் வசித்த இடம். தெருவின் இரண்டு முனையையும் வென்பாக்கத்தார் பிடித்துக்கொண்டனர். கீழக்கோடியில் ஸர் வி. பாஷ்யம் ஐயங்கார்: மேலக்கோடியில் ஸர் வி. ஸி. தேசிகாசாரியார்: நடுவிலே இன்னம்பூரார் வீடு. இன்னம்பூர் தஞ்சை ஜில்லாவில் சிறிய கிராமம். அதற்கு யோகம் பிறந்தது: பெயர் பிரகாசித்

தது. பெருமை தேடிக் கொடுத்தவர் திவான் பஹதூர் ஸ்ரீநிவாஸராகவையங்கார். கவர்ன்மெண்டின் காரியாலயத்தில் நுழைந்து, படிப் படியாக மேம் பதவி பெற்று, யோக்கியதையின் சிறப்பு மாகாணம் கடந்து, முடிவிலே பரோடா சமஸ்தான திவானாக வேலை பார்த்து, காலகதி அடைந்தார். உத்தியோக பந்தாவிலே உழைத்தவர்; பொது வாழ்விலே பங்கெடுக்க வசதி இல்லாமல் போய்விட்டது. இருந்தாலும் மறைமுகமாக பலருக்கு யோசனை சொல்லவும் வழி காட்டவும் உதவினார். நன்றாகப் படித்தவர்; நாலு விஷயங்களையும் அறிந்தவர். அவர்படித்துக் குவிந்த புத்தகங்கள் கணக்கில் அடங்கா. 10, 15 பீரோக்கள் நிறைந்து கிடந்தன. தர்க்கம், வியாகரணம், வேதாந்தம், விக்ஞானம், வணிபம், கணிதம், சரித்திரம், அரசியல், அர்த்த சாஸ்திரம் எல்லாவற்றிலும் ருசி தட்டி, பதம் பார்த்தவர். எதைப் பற்றியும் ரசிக்கும்படிப் பேசக்கூடியவர். மாகாண மக்களின் முன்னேற்றத்தைப் பற்றி அன்று அவர் எழுதிய நூல் இன்றைக்கும் அசைக்க முடியாத ஆதாரம் கொண்டிருப்பதைக் காணலாம். ஞானம் விரிந்து, வினயம் மிகுந்து, சாந்த மூர்த்தியாய் விளங்கிய அந்தப் பெரியாருக்கு கடைசிப் பிள்ளையாக பிறந்தவர் எஸ். ரங்கஸாமி. பிள்ளையை வளர்க்கும் பாக்-

நியம் பெரியாருக்கு இல்லை. வேளையில் உரம் வைத்து, களை பிடுங்கி, கதிர் காண அவருக்குக் கொடுத்து வைக்கவில்லை.

* * * *

கட்டுப்பாடும் கண்காணிப்பும் இல்லாமல் தன்னந் தனியாக வளரும்போது குறைகள் காண்பது எளிது; குணம் புலப்படுவது கஷ்டம். ரங்குவின் சுபாவம் நெருங்க இடம் தரவில்லை. வீட்டிலும் சரி, வெளியிலும் சரி, வாழ்நாள் பூராவும் அவருடன் அந்தரங்கமாகப் பழகிய வரை விரல் விட்டு எண்ணி விடலாம். நல்ல படிப்பாளி; சதா காலமும் புத்தகமும் கையுமாகக் காண்பார். ஆனால் பள்ளிக்கூடத்தில் சோபிக்கவில்லை; பரீக்ஷைப்படிப்பில் பிடிப்பில்லை; பரிசு பெறத் தூண்டுதல் இல்லை; பாண்டித்தியம் பெறவும் சிரத்தை இல்லை. பின் என்னபடித்தார்? கணக்கற்ற கதைப் புத்தகங்கள்! அறிவைத் தீட்டும் அநுபவ நூல்கள்! கவிதையிலும் கற்பனையிலும் மெய் மறந்தார். ஞான ரதம் ஏறி, கடல் கடந்து, காணுததைக் கண்டார். உலகத்திலே வியாபிக்கும் சக்திகள்; மனித இயல்பின் மர்மங்கள்; பல தேசப் பழக்க வழக்கங்கள்; இவையெல்லாம் கண்டார். வெளித் தோற்றத்தையும் உட்கருத்தையும் பிரித்துப் பார்க்கக் குவம் பெற்ருர். பிற்காலத்தில் பொறுப்பு

ஏற்பட்டபோது அவர் காட்டிய அநுபவ ஞானத்திற்கு அஸ்திவாரம் இவை தான். பிறரு டன் பழகாமல், பொது வாழ்வில் பங்கெடுக் காமல், ஆளை அளக்கவும், சக்தியைச் சோதிக் கவும் அவர் பெற்ற பக்குவம் அதிசயிக்கத்தக்கதா யிருந்தது. சோடு காணுத படிப்பு சுவை நிறைந்த எழுத்தில் பிரதிபலித்தது. அவருடைய களஞ்சி-யத்திலிருந்து கிளம்பும் மேற் கோள்களும் மூலா-தாரங்களும் பலருக்கு திகைப்பைத்தரும; சில புரியவும் மாட்டா. ஆனல் பொருத்தம் பிரத்தி-யக்ஷமாகத் துலங்கும். எங்கே, ஏது, என்று கண்டு பிடிப்பது கஷ்டம். அகராதியில் அடங்-காதவை. படித்து ரஸித்தவருக்கெல்லாம் ஒரு குறை. இவ்வளவு அழகாக எழுதக் கூடியவர் இவ்வளவு காலம் ஏன் உறங்கிக்கிடந்தார் என்றனர். சக்தியைக் காணச் சந்தர்ப்பம் தேவை அல்லவா ? சக்தி சண்டையிலிருந்து முளைத்தது, ஐரோப்பிய மகாயுத்தம் சந்தர்ப் பத்தைக் கொடுத்தது.

* * * *

1908-இல் 'பி. ஏ.' பரீக்ஷை தேறிஞர். மேற் கொண்டு என்ன செய்வது? உத்தியோகம் தேடுவதா ? நல்ல சம்பளத்தில் நுழைய வசதி காணவில்லை. மேலே படிப்பதா ? எதற்கு படிப்பது? லா காலேஜில் சேருவதா ? அல்லது

'எம். ஏ.' படித்தால பயனுண்டா? ஒன்றும் புரிய வில்லை. கூடப் பழகியவர்கள் சிலர் லா காலேஜில் சேர்ந்தனர். மற்றும் சிலர் பழைய காலேஜில் படித்துக்கொண்டிருந்தனர். இரண்டு கோஷ்டி-யையும் விட்டுப்பிரிய மனமில்லை. இரண்டு காலேஜிலும் பணம் கட்டிவிட்டார்! விளையாட்-டிலே திருஷ்டி. அவர் காலத்தில் தான் ஹாக்கி விளையாட்டு பிராபல்யம் பெற்றது. அதில் அவ-ருக்கு நல்ல தேர்ச்சி. விளையாட்டை உத்தேசித்த படிப்பு விளங்குமா? சீக்கிரம் சலித்துவிட்டது. "ஹிந்து" ஆபீஸில் புகுந்தார். விளையாட்டுப் பிள்ளை வணங்கி வேலைசெய்யவேண்டுமே என்ற கவலை கஸ்தூரி ரங்க ஐயங்காருக்கு உண்டு. இருந்தாலும் வேலை கொடுக்க மறுப்பதற்கில்லை. நாற்பது ரூபா சம்பளத்தில் நுழைந்தார். வேலையில் சிரத்தை காட்டவில்லை: சிரத்தை உண்டாக்க யாருக்கும் சிரத்தையும் இல்லை. ராய்ட்டர் தந்தியைச் சித்தரிப்பதே வேலை. நொடிப் பொழுதில் வேலையை முடித்துவிட்டு கதையில் ஆழ்ந்து விடுவார். பத்திரிகையில் என்ன போகிறதென்ற கவலை அவருக்கில்லை. வேறு வேலை வாங்கவும் யாரும் துணியவில்லை. தான் உண்டு, தன் வேலை உண்டு, என்று காலம் கழித்து வந்தார். யுத்தம் வந்தது. சூடு கண்டது. ராய்ட்டர் தந்திகளைத் தொகுத்து விஷயத்தை

விளக்கிக்கூற நிர்ப்பந்தம் பிறந்தது. எழுத ஆரம்பித்தார். எல்லோர் மூக்கிலும் கை ஏறி விட்டது. சண்டைப் பிரதேசத்தை அறிந்தவர்கள், யுத்தத்தை தொழிலாகக் கொண்டவர்கள், அவர் விளக்கத்தைக் கண்டு பிரமித்தனர். இன்ன இடத்தில், இன்ன காரியம் இன்ன உத்தேசத்துடன் செய்யப்படுகிறதென்பார். உண்மையில் அவ்வாறே இருக்கும். இன்று ஆரம்பிக்கும் காரியம் நாளைக்கு எவ்வாறு முடியும் என்று கூறுவார். அவ்வாறே முடியும். எல்லாரும் வியந்தனர். வெளியாரை விட ஆபீஸில் உள்ளவர்களுக்கே ஆச்சரியம் அதிகம். யுத்த அரங்கங்களைப் பார்வையிட "ஹிந்து" ஆசிரியருக்கு அழைப்பு வந்ததற்கு அவர் எழுத்தே காரணம்.

* * * *

காலம் கூடிவிட்டது. எழுத்தின் வன்மை விளங்கி விட்டது. எழுதவும் ருசி பிறந்து விட்டது. கஸ்தூரி ரங்க ஐயங்காருக்கு நம்பிக்கையும் வந்துவிட்டது. காரசாரமாய் எழுத வேண்டுமானால் ரங்குவுக்குச் சீட்டு விழுந்துவிடும். "மதராஸ் மெயில்" பத்திரிகையில் வெல்பி என்பவர் ஆசிரியராயிருந்தார். மமதை மிகுந்தவர்: துடுக்காய் எழுதுவார். இந்தியாவில் பிழைக்க வந்தவர் இந்தியரிடத்தில் அனுதாபம்

காட்டவில்லை. இல்லாததும் பொல்லாததும் எழுதி வந்தார். அவர் கொட்டத்தை அடக்க யாராலும் இயலவில்லை. ரங்கு புகுந்தார் சண்டையில். வாலை ஓட்ட நறுக்கிவிட்டார். ஊரெல்லாம் சிரிக்க, உடும்பு பிடித்தவன் கதையாக, ஊருக்கு ஓடிவிட்டார் வெல்பி. மிதவாதிகள் சலசலப்பு அதிகமாக இருந்தது: காங்கிரஸை விட்டுப் பிரியும் காலம்: அவர்கள் 'பவிஷை' ஆற்றிவிட்டார் சமயம் நேர்ந்த போதெல்லாம். கண்டித்து எழுதுவது எளிது: காரமாயும் எழுதலாம்: ஆனால் கண்டனத்திலே கவர்ச்சி காண்பது அரிது: காரத்திலே களியூட்டும் கேலி காண்பது அபூர்வம்: அவை ரங்குவின் ஏகபோக உரிமை. பத்திரிகையை ஆவலுடன் பிரித்துப் பார்ப்பவர்கள் ரங்கு எதாவது எழுதியிருக்கிறாரா என்று பார்ப்பர். இல்லையேல் பத்திரிகை படிப்பதில் உள்ள பாதி ஸ்வாரஸ்யம் போய்விடும். விளக்கத்தை விட்டு விஷயத்தைப் பார்த்து முடிப்பார்கள். இத்தனைக்கும் ரங்குவை ஒருவரும் அறியார். பார்த்தாலும் எடுப்பு துலங்காது. முகவெட்டு இல்லாதவர் பத்திரிகைக்கு முகம் கொடுத்ததே ஆச்சர்யம். இன்றைக்கும் எனக்கு ஒரு குறை உண்டு. காலத்தில் அவருக்கு ஆக்கமும் ஆதரவும் அளித்திருந்தால், காலனையும் வென்றிருக்கலாமோ

என்ற சங்கை தான் அது. ஆறுதல் ஒன்றுண்டு. கடைசியிலாவது காலபலம் கூடி நாடெங்கும் சிறப்புறச் செய்ததே என்பதுதான் அது.

* * * *

நாற்பது ரூபாயில் நுழைந்தவர் எண்ணூறு ரூபாய் சம்பளத்தில் இறந்தார். சுகப்படவில்லை. காலம்கடந்து வந்த செல்வமும் சிறப்பும் அவருக்கு உதவவில்லை. கடைசி வரையில் அழுக்கு வேஷ்டியும் கிழிந்த சொக்காயும் அவருக்கு நிலைத்தன. சிரத்தையில்லை. பழக்கமும் பெருகவில்லை. பணத்திலே என்றைக்கும் பிரமை இல்லை. அவரிடம் இருந்த பணம் எல்லாருக்கும் சொந்தமாயிருந்தது. வரட்சி கண்டு வாட்டமுற்றார். ஆனால் மனம் மாறவில்லை. பணத்திற்கு மிதமிஞ்சிய மதிப்பு என்றைக்கும் கொடுத்தாரில்லை. கடுகு செத்தாலும் காரம் விடாதென்பர். என்றைக்கும் யாரையும் வணங்கியவர் அல்ல. நிமிர்ந்து நடப்பார். அச்சம் அறியாதவர். உடையிலே மாசு படிந்தும், உள்ளத்திலே மாசில்லை. குணம் குழந்தைப் பர்வம் கடைசி வரையில். சூது வாது தெரியாது. ஏமாற்றுவது எளிது. என்ன ஏமார்ந்தும் ஔதார்யம் ஒடுங்கவில்லை. பிறப்பிலே பிரபு; பெரிய புத்தியும் பெரும்போக்கும் பிதுரார்ஜிதம். என்ன

17140
மறைமலையடிகள் நூல்நிலையம்
MARAIMALAI ADIGAL LIBRARY
MADRAS-1

ராக

இருந்தும் என்ன? கஷ்டப்படவேண்டியதா யிற்று. யோக்கியதை மிகுந்தவர். யோகபாவத் திலும் குறைவில்லை. காலத்திலே சங்கிரமணம் மாத்திரம் காணவில்லை. அதன் விளைவு என்ன பாருங்கள்! ரங்குவே அடிக்கடி ஒரு கோட்பாடு கூறுவார். அது அவருக்குப் பொருந்தும்.

"சிறிது கூடினல்-எவ்வளவு கூடுதல்!
சிறிது குறைந்தால்-எவ்வளவு குறை!!"

6

எஸ். ஸ்ரீநிவாஸ ஐயங்கார்*

ஆங்கிலத்திலே ஒரு வசனம் உண்டு! பெரிய மனிதர்களின் பாகுபாட்டை அது விளக்குகிறது. பரம்பரையாகப் பெரிய மனிதர் சிலர்; யோக்கியதையால் பெரிய மனிதர் சிலர்; யோகத்தால் பெரிய மனிதர் சிலர். ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸ ஐயங்காரைப்பற்றி எழுதும்போது இந்த வசனம் ஞாபகத்திற்கு வருகிறது. மூன்று வகையிலும் பெரிய மனிதர் ஆனவர் அவர். செல்வத்திலே பிறந்து, செல்லமாக வளர்ந்து, செல்வாக்குடன் வாழ்வு ஆரம்பித்தார். தொழிலில் தேர்ச்சியும் திறனும் பெற்று, மதிப்புக்குப் பாத்திரமானார். யோகமும் சேர்ந்து கொண்டது! அவரைக் கட்டிப்பிடிக்க முடியுமா? பத்து வருஷ காலம்—1920 - இலிருந்து 1930 வரையில்—அவர் பால் மக்கள் காட்டிய மரியாதைக்கும், மதிப்புக்கும் அளவுண்டோ? திடீரெனத் தோன்றினார் 1920-

---

★ 13-4-41 அன்று 'சுதேசமித்திரன்' வாரப் பதிப்பில் வெளிவந்தது.

இல்; மாயமாய் மறைந்தார் 1930-இல். திருநெல்வேலியில் கூடிய மாகாண மகாநாட்டில் அவருக்குக் கொடியேற்று விழா நடந்தது. கௌஹத்தி காங்கிரஸில் அக்கிராசனராக உச்சஸ் தாயியை அடைந்தார். லாகூரிலே பரிபூர்ண சுயவாட்சிக் கொடி பறந்தது. அதற்கு ஆக்கம் அளித்தவர் அவர். ஆனால், ஆச்சர்யம்! காங்கிரஸிலிருந்து சரேலென்று விலகிக்கொண்டார். காரணம் இன்றளவும் மர்மமாகவே இருக்கிறது. சரியான சமாதானம் சொல்வது சிரமம்.

* * * *

பார்ப்பதற்கு கட்டை குட்டையாக இருப்பார். உடலின் காத்திரத்திற்கு உயரம் காணாது. கழுத்தும் கரளை தட்டிவிட்டது. தலையைத் தூக்கித் தூக்கி, சுமை தாங்காமல் தழைந்து விட்டது போலும்! பரந்த முகம்; பௌருஷம் பொரிந்த தோற்றம். கண்கள் அழகே-கவர்ச்சிக்குக் காரணம்; உருண்ட, திரண்ட கண்கள்; ஆற்றல் மிகுந்த, அறிவு முதிர்ந்த கண்கள்; படித்துப் படித்துப் பார்வை இழந்த கண்கள்; கண்டும் காணாத கண்கள். உதட்டிலே உறுதியைக்காணலாம்; பேசிப் பேசி உதடும் சரிந்து விட்டது. மன்னன் பேச ஆரம்பித்தால், மணிக் கணக்கில் பேசுவார். என்னென்னவோ, ஏதேதோ பேசுவார். கோர்வையோ குறியோ

காணுது. பேச்சு ரஸிக்கவேண்டும் என்ற கவலை இல்லை. காரணம் என்ன? மனதிலே உதிக்கும் கருத்துக்கள் நாக்கிலே தந்தியடிக்கின்றன. அவ்வளவு தான்! அபார மூளை; சதா சாணை பிடிக்க வேண்டும்; கேட்போர் சாணைக் கல்லுக்கு சமானம்; தீப்பொறிகளே பேச்சு. ஆனால் வெட்டிப் பேச்சு விட்டோடு சரி: வெளியிலே உளவறிந்த பேச்சு; விசை நிறைந்த பேச்சு; விஷயம் மிகுந்த பேச்சு. கோர்ட்டிலோ கேட்கவேண்டியதில்லை. கற்ற கல்வியின் மேன்மையெல்லாம் அங்கே காணலாம். சட்டத்தின் மர்ம ஸ்தானங்களை ஆராய்ந்து அறிந்தவர். சூக்ஷ்ம அறிவு. சட்டத்தையே வில்லாக வளைத்து மோகனுஸ்திரம் தொடுப்பார்; கேட்போர் பிரமிப்பர்; புத்தி பேதளிக்கும்; நீதிபதியைக் கூட்டிலேற்றி விடுவார். நியாயவாதத்திலே அவருக்கு இணை நாட்டில் இல்லை.

*   *   *   *

பரம்பரையாகப் பணக்காரர்; சுயமாகவும் சம்பாதித்தவர். பணத்திலே மோகம் இல்லை; ஆனால் பணத்தின் பலத்தை அறிவார். தாராளமான கை; தாட்டியாகக் கொடுப்பர். அளவுக்கு மிஞ்சியும் அள்ளிக் கொடுப்பார். மனம் இருக்க வேண்டும்; சமயம் ஒத்துக்கொள்ள வேண்டும். கொடையில் விதரணை குறைவு. ஒரு ரூபா

கொடுக்கவேண்டிய இடத்தில் நூறு ரூபா கொடுப்பார். நூறு ரூபா கொடுக்கவேண்டிய இடத்தில் ஒரு ரூபா கொடுக்கவும் மறுப்பார். பத்து வருஷகாலம் பொது வாழ்வில் பங்கெடுத்த போது, சொந்த அளவில் லக்ஷக்கணக்கில் செல-வழித்திருப்பார். கணக்கற்றவர்களுக்கு பண உதவி புரிந்தார். எவ்வளவு பேர் இன்று விசு-வாஸம் பாராட்டுகிறார்கள்? பணத்திற்குள்ள பலம் அவ்வளவு தான். கொடுக்கும் வரையில் தான் கொடுப்போரிடம் நன்றி காட்டும் இந்த நயவஞ்சக உலகம்! அநுபவத்தில் அதை அறிந்து கொண்டார். பின் அறிவில் பயன் உண்டோ? பணத்துடன் நல்லசெல்வாக்கும் அவருக்கு இருந்தது. பெரிய பதவியிலிருந்து தானாக விலகிக் கொண்டார். தியாகம் சுரக்காத காலத்தில், அவருடைய தியாகம் தீபம் போல் துலங்கிற்று. பூர்ண கும்பத்துடன் அவரை வரவேற்றார்கள். மாகாண மகாநாட்டின் அக்கிராசனராகவும் வரித்தார்கள். மேளதாளத்துடன் பொது-வாழ்வில் புகுந்தார்.

*   *   *   *

சுற்று முற்றும் பார்த்தார். திக்கு திசை துலங்கவில்லை. நாட்டிலே நெருக்கடியான நேரம். பழகியவர்களுக்கே புலன் புரியவில்லை. காங்கிரஸிலே புதிய சக்தி புகுந்து விட்டது.

கருத்தை வெளியிடுவதுடன் நிற்கவில்லை; காரியத்தில் இறங்கவும் துணிந்துவிட்டது. தயவைத் தேடிய காலம் போய், தடை விதிக்கும் காலம் வந்துவிட்டது. நிர்வாகம் நடக்கவேண்டுமானால் ஜனங்களை மதிக்க வேண்டும்; அவர்களுடைய உரிமைகளைக் காக்கவேண்டும்; உயர் வாழ்வுக்கு வழி கோலவேண்டும்; இல்லையேல் நிர்வாகம் எதற்கு; பொதுஜன சம்மதமில்லாத நிர்வாகத்தை நிலைக்கவிடோம் என்று சொல்ல ஆரம்பித்துவிட்டது. எச்சரிக்கையோடு நிற்கவில்லை. பலம் தேடவும் புறப்பட்டுவிட்டது. பலாத்காரம் இல்லாத பலம்! தியாகமே அதற்கு உயிர் நாடி. தியாகத்திற்குத் திட்டம் வகுத்துவிட்டது காங்கிரஸ். அந்தஸ்தும் செல்வாக்கும் உள்ளவர் தயங்கினர். அன்றாட வாழ்வில் தியாகம் தீண்டியவர் தயங்கவில்லை. உறங்கியவர் ஒரே ராத்திரியில் விழித்துக்கொண்டனர். அதற்கு பஞ்சாப் புண்ணியம் கட்டிக்கொண்டது. அடக்குமுறை எரிகிற தீயை ஏறத்தள்ளிற்று. காலத்திற்கேற்ற தலைவரும் தோன்றினார். எங்கும் சத்தியாக்ரக முழக்கம்! ஸர்வம் காந்தி மயம் ஜகத்! சத்தியாக்ரக தர்மத்திலோ, சட்ட மறுப்பு முறையிலோ, பகிஷ்காரத் திட்டத்திலோ ஸ்ரீநிவாஸ ஐயங்கார் நம்பிக்கை கொள்ளவில்லை. வெள்ளம் வடியக் காத்திருந்தார்.

வெள்ளமும் வடிந்தது. வேகம் தணிந்தது: விசை அடங்கிற்று. வெள்ளச்சேறு எங்கும் தென்பட்டது. லாபம் கண்டது என்ன? நிதர்சனமாக ஒன்றும் இல்லை எனலாம்; ஆனால் நிரந்தரமாக எல்லாம் உண்டு. பயம் தெளிந்து, பலம் கண்டது பெரிய லாபமல்லவா? பலம் மின்னல்போல் தோன்றி மறைந்தது. ஸ்வர்க்க வாசலை மக்கள் கண்டனர். கடந்து செல்ல, பலம் காணவில்லை. பக்குவம் பெருத பலம்! வேரில்லாத வலு! இன்னும் ஒன்று: பயமும் பலமும் பரிவர்த்தனை பண்ணிக்கொண்டன. பயமிருந்த இடத்திற்கு, பலம் சென்றது; பலமிருந்த இடத்தில் பயம் முளைத்தது. அதிகாரிகள் ஆட்டம் கண்டனர். அதிகாரத்தின் அஸ்திவாரத்தை அறிந்தனர். சட்ட மறுப்பு இயக்கம் விசுவரூப தர்சனத்தில் முடிந்தது. விசுவரூப தர்சனம் உண்மையை விளக்கிற்று. ஆனால் மாயையை மாய்த்தவர் மறைந்து விட்டார். சிறையில் அடைத்துவிட்டனர். சிறை புகுமுன் சத்தியாக்ரக இயத்தையும் அவர் நிறுத்திவிட்டார். சிந்திய சக்தி, ஸவரூபம் பெறத் தவித்தது. சுயராஜ்ய கக்ஷி முளைத்தது. காந்தி சீடர்களில் ஒரு சாரார் அதற்கு ஆக்கம் தேடப் புறப்பட்டனர். தென் நாட்டிலே தலைவர் துலங்கவில்லை. ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸையங்காருக்கு பாக்கு

வைத்தனர். பலர் வேண்டப் பதவி ஏற்ருர். ஆச்சர்யமான வேலே செய்தார். ஊர் ஊராகச் சென்று விசை திட்டினுர். வீடு வீடாக ஏறி வாக்குப் பெற்ருர். பிராமணரல்லாதார் பெயரைச் சொல்லிப் பிழைத்தவருக்கு உலே வைத்து விட்டார். பிராமணரல்லாதவர் உண்மையில் தேசபக்தர்கள், காங்கிரஸ் அபிமானிகள், என்பதை மெய்ப்பித்துவிட்டார். அன்று அரும் தொண்டாற்றினுர். அது என்றும் நிலேக்கும்!

*　　*　　*　　*

இரண்டுபட்ட காங்கிரஸ் மீண்டும் ஒன்ருகி விட்டது. மகாத்மாவும் வெளிவந்து துணே புரிந்தார். சுயராஜ்யக் கட்சிக்கு ஆதரவும் அத்தாட்சியும் தேடிக்கொடுத்தார். தென் நாட்டிலே திறம்பட வேலே செய்த ஸ்ரீமானுக்கு காங்கிரஸ் அக்கிராசன பதவியும் கிடைத்தது. ஒரு வருஷ காலம், ஓய்வு ஒழிவு இல்லாமல், அவரும் உழைத்தார். ஹிந்து-முஸ்லிம் வேற்றுமைகள் மீண்டும் முளேக்க ஆரம்பித்தன. அதைக் கிள்ளியெறிய அரும்பாடு பட்டார். காங்கிரஸ் லக்ஷியத்தையே மாற்ற முற்பட்டவரும் அவர்தான். உத்சாகம் மிகுந்தவர். உழைப்பிலே சலிப்பறியாதவர். ஆனுல் நான்குபேருடன் ஒத்துழைக்கப் பக்குவம் பெறவில்லே. சுலபமாகவும், சகஜமாகவும் பழகினுர். பழகியவர்களேச் சமமாகவும், சகாவாக-

வும், கொள்ளவில்லை. தன்னை விட பிறருக்கு அதிகம் தெரியுமென்று ஒரு நாளும் ஒப்ப-மாட்டார். கஷ்டம் அறியாதவர்; யாருடைய தயவும் தேவை இல்லை. பணப்பை தளர்ந்த போது, பலர் சூழ்ந்து நின்றனர்; இருகியதும் வடம் விட்டனர். ஆழ்ந்த அறிவு இருந்தும், அள-வில்லாத ஆற்றல் இருந்தும், நிலைக்கவில்லை. காந்-தீயம் ராஜீயத்தைக் கப்பிவிட்டதாக அவர் நினைக்கிறார். காந்தியிடத்தில் மட்டிடில்லாத மரியாதை அவருக்கு உண்டு. காந்தி வேறு, காந்தீயம் வேறு என்பது அவர் ஸித்தாந்தம்; காந்தீயம் உள்ளளவு தனக்குத் துறையில்லை என்பது அவர் நினைவு. காந்தீயத்தை அழிக்கவே இன்று வேலை செய்து வருகிறார்.

7

எஸ். சத்யமூர்த்தி*

ஸ்ரீ சத்யமூர்த்தியிடத்தில் எனக்கு அலாதி விசுவாஸம். சுமார் 25 வருஷ காலமாகத் தெரியும்; பொது வாழ்வில் புகுந்தது முதற்கொண்டு பழக்கம். ராஜீயத் துறையில் அவர் செய்த சேவையை மதிப்பிடுவது எளிதல்ல. இன்று தமிழ் நாட்டிலே விழிப்பு உண்டா? அதைத் துலக்கியது அவர். தமிழ் நாட்டிலே வீரம் உண்டா? அதைத் தீட்டியது அவர். ஓய்வுநேர வேலையாக அவர் கொள்ளவில்லை. ஒழிந்த நேர விளையாட்டாக அவர் கருத வில்லை. வாழ் நாள் பூராவையும் தத்தம் செய்தார். எல்லை காணாத வேலை; செய்யச் செய்ய, சுரந்துகொண்டே சென்றது. வானவில்லைத் தொடர்வது போல் ஆயிற்று. நெருங்க நெருங்க நகர்ந்துகொண்டே போயிற்று. அது மாத்திரமா? ஊதியமில்லாத உழைப்பு. ஊருக்கெல்லாம் சேவகம். பழுது கூறப் பலர் உண்டு. பாராட்ட மிகச் சிலரே முன் வந்தனர். நண்பர்களே சிலர் யோசிக்காமல்

---

*20-4-41 அன்று 'சுதேசமித்திரன்' வாரப் பதிப்பில் வெளிவந்தது

பேசக் கேட்டிருக்கிறேன். அவருக்கு என்ன குறை! நல்ல யோக ஜாதகம். போகுமிடமெல்லாம் மரியாதை; கழுத்தை நீட்டின இடமெல்லாம் மாலை; வந்த வீட்டிலெல்லாம் விருந்து-என்றெல்லாம் கூறினர். அற்ப புத்தியும் அறியாமையும் தான் காரணம். ஒரு வேளை விருந்து சாப்பிட்டால் எவ்வளவு நாள் தாங்கும்? வீட்டிலே அடுப்பு புகைய வேண்டுமே? யார் மான்யம் கொடுத்திருக்கின்றனர்? நாள் பூராவும் நாட்டுக்கு உழைக்கிறரே, காலக்ஷேபத்திற்கு என்ன செய்கிருர் என்று யாராவது கவலை கொண்டார்களா? குறை கூற மாத்திரம் வந்து விடுகிருர்கள்! உலகத்தின் இயல்பு அது. நொந்து கொள்வதில் பயனில்லை.

* * * *

ஏழைக் குடும்பத்தில் பிறந்து, சிரமப்பட்டுப் படித்து, பெருமையாகப் பரீக்ஷையில் தேறி, வக்கீல் தொழிலில் இறங்கினர். சலுகையோ செல்வாக்கோ அவருக்கு இல்லை. காலம் கூடி வரக் காத்திருந்தார். காலத்தை வீணுக்காமல் கலை வளர்ச்சியில் கவனத்தைத் திருப்பினர். சுகுண விலாஸ சபையார் நடித்த நாடகங்களில் சிரத்தை சென்றது. நாடக மேடையில் கூச்சம் கழிந்தது. பேசவும் பழகிக்கொண்டார். பேச்சின் வன்மையை அறிந்தார். பேசப் பிரியம்

பிறந்தது. பேச சந்தர்ப்பமும் பெருகி வந்தது; வசியமாகப் பேச பக்குவப்படுத்திக்கொண்டார். கேட்போர் உள்ளம் உருக, உணர்ச்சி பெருக, பேசுவது எளிதல்ல. உள நூல் அறிவு வேண்டும். எந்த இடத்தில் எப்படிப் பேசினால் ஏறும் என்று தெரியவேண்டும். படிப்பு இருந்தால் மாத்திரம் போதாது. சத்யமூர்த்தியைவிட ஆழமாகக் கற்றவர் உண்டு. ஆனால் படித்ததை அவரவ்வளவு ஆளக் கற்றவர் இல்லை. கூட்டத்திற்குக் கூட்டம் வித்தியாசம் உண்டு. ஓரிடத்தில் பேசுவது இன்னொரு இடத்தில் எடுக்காது. வாதம் நிறைந்த பேச்சு, சாதாரண ஜனங்கள் நிறைந்த கூட்டத்தில் பயன்படாது. பசப்பும் பகட்டும் அறிவாளர்கள் நிறைந்த கூட்டத்தில் பலிக்காது. சத்யமூர்த்தி கெட்டிக்காரர். பேசு முன் கூட்டத்தின் லக்ஷணத்தை அளந்து, கட்டி விடுவார். கூட்டம் பெருகப் பெருக, குஷால் அவருக்கு ஜாஸ்தி. பெரும் கூட்டத்தைக் குஷிப் படுத்துவது எளிது. தொண்டை வலு தேவை. உச்சரிப்பு அழுத்தந் திருத்தமாயிருக்கவேண்டும். கேட்போர் மனதில் உதிக்கும் கருத்தை அறிந்து அவர்கள் ரசிக்கும்படி அதைச்சித்தரித்து வழங்க வேண்டும். சூக்ஷ்மம் அவ்வளவு தான். அறிய அநுபவம் வேண்டும். ஆளச் சக்தி வேண்டும். இரண்டும் நன்றாக அமைந்திருந்தன சத்யமூர்த்தி

யிடத்தில். ஆங்கிலத்தில் நன்ருகப் பேசுவார். அதை விட நன்ருகத் தமிழில் பேசுவார். இரண்டிலும் தேன் போல் ஒழுகும் தேவபாஷையி-லிருந்து மேற்கோள்கள். ஸம்ஸ்கிருதத்தில் நல்ல பாண்டித்தியம். பேச வேறு என்ன வேண்டும் ?

*   *   *   *

இடைக்கால வேலை இடைவிடாத வேலையாக முடிந்தது. தொழிலுக்கு அவகாசம் காணவில்லை. ராஜீயக்கிளர்ச்சி வலுத்து விட்டது. ஹோம்-ரூல் லீக் பிரசாரவேலையில் இறங்கிற்று. சத்யமூர்த்திக்குக் கிடைத்த அழைப்புக்கு அளவில்லை. பேசிப் பேசி பேச்சிலே மெய்மறந்-தார். ஊராருக்கு உபதேசித்தது உள்ளத்திலே ஊன்றிக்கொண்டது. ஆழத்தை அவரே அறியவில்லை. காங்கிரஸ் சரித்திரத்தில் காந்தி படலம் ஆரம்பமாயிற்று. தியாகத் திட்டத்தைக் கண்டு சற்று திகைத்தார். முன்செல்ல மனம் துணியவில்லை. பின் வாங்க மனம் தாங்கவில்லை. தொழிலிலே எஞ்சியிருந்த சிரத்தையும் நீங்கி விட்டது. சுயராஜ்யக் கக்ஷி காங்கிரஸிலிருந்து முளைத்தபோது பிரசார வேலையில் முழு மூச்சாக இறங்கினுர். பிரசாரத்திற்கு அவரிடம் கண்ட பிரசக்தி யாரிடமும் காணவில்லை. பிரசார லக்ஷணத்தை நம் நாட்டில் இன்னும் பலர்

அறிந்துகொள்ளவில்லை. கடுமையான கண்டனத்தைக் கண்டு கலங்குகிறார்கள். அநுபவம் உள்ளோர் ஆயாசப்படத் தேவையில்லை. கண்டனத்தில் கருத்தில்லை. கக்ஷிவாதத்தில் கூட்டியும் குறைத்தும் தான் பேசுவார்கள். அதில் தவறும் இல்லை. சம்பிரதாயம் அதுதான். வக்கீல் தன் கக்ஷியின் நியாயத்தையே எடுத்துக் கூறுவார். நடுக் கண்ட நியாயத்தை வழங்குவது நீதிபதியின் வேலை. பிரசாரம் வக்கீல் வாதத்திற்கு சமானம். ஜனங்கள் ஜூரர்கள் நிலையில் இருக்கிறார்கள். இந்த ஜூரியை வசப்படுத்துவதில் சத்ய மூர்த்தி மகா சமர்த்தர். பேச ஆரம்பித்தால் நொடிப் பொழுதில் நாதம் கட்டிவிடும். வீணைத் தந்தி மீது விரல் ஓடி, ஒலி எழுப்புவது போல் இருக்கும் அவர் பேச்சு. கண்ணன் குழலோசை கேட்டு, விலங்குகளும் வீறிட்டெழுந்தனவென்று கதை சொல்வார்கள். சத்யமூர்த்தி பேசிய கூட்டங்களில் இது கண்கூடு. உணர்ச்சியற்று உறங்கிக் கிடந்த மக்களைத் தட்டியெழுப்பி தாரக மந்திரம் உபதேசித்தார். என்ன வேலை செய்தார் அவர்! ஆயிரம் தரம் சொன்னாலும் தகும்.

* * * *

சட்ட சபையில் நுழைந்தார்; முதலில் சென்னை சட்ட சபையில்; பிறகு இந்தியா சட்ட

சபையில்; இரண்டு இடத்திலும் நல்ல பெயர்; நடை முறை விதிகளை நன்றாக அறிவார். விஷய விவரம் அறிந்தே பேசுவார். பேச்சிலே இடை வெளி காணாது. குறும்பாய்க் குறுக்கிட்டால் நல்ல சூடு கொடுப்பார். வாதம் கோபுரம் போல் ஏறும். கவர்ச்சி மிகுந்த காட்சி! கடைசியாக டில்லியில் ஆறு மாதம் முன் பேசக்கேட்டேன். இந்தியா சட்ட சபையில் இரண்டு மணி நேரம் பேசினார். கவர்ன்மெண்டை 'விளாசி' விட்டார். குற்றச்சாட்டு கனகடுமை. ஆனால் காது கொடுத்துக் கேட்பவர் இல்லை: செவிடன் காதில் ஊதிய சங்கு! பாடுகிற பாட்டைப் பாடிவிட்டு கதவைத் தாளிட்டுச் செல் என்ற கதையாக இருந்தது. சத்யமூர்த்திக்கு அது தெரியும். சட்ட சபையிலிருந்து விலகுவதில் அவருக்கு இஷ்டமில்லை. உள்ளே இருந்து கொண்டே ஆட்டிவைக்க வேண்டும் என்பது அவர் கருத்து. யோசனை ஏறவில்லை. சட்ட சபையிலிருந்து கொண்டு செய்யக்கூடிய வேலைக்கு அவர் செய்து காட்டிய சேவையே போதிய சான்று. கேள்வி நேரம் சத்யமூர்த்திக்கு ஸர்வமானியம். அடிக் கேள்வி ரொம்ப சாதுவாயிருக்கும்: பதில் சொல்ல வேண்டியதுதான் தாமதம், புதை வாணம் போல் புறப்படும் உப கேள்விகள். மழுப்ப முடியாது; ஏய்க்க முடியாது; மடக்கிவிடுவார்.

கேள்வி நேரம் சோதனை காலம் அதிகாரிகளுக்கு. சத்யமூர்த்தியைக் கண்டால் சிம்ம சொப்பனம். இவ்வளவுக்கும் அதிகாரிகளுக்கு அவரிடத்தில் அலாதி மதிப்பு. வேலை தெரிந்தவர், விஷயம் அறிந்தவர், பொறுப்பை உணர்ந்தவர் என்பது தான் காரணம். சட்ட சபைக்குள் பொக்கிஷ மெம்பர் கிரிக்கும் பொதுஜன மெம்பர் சத்ய மூர்த்தியும் நரியும் நாயும் போல் சண்டை போடுவர். சபைக்கு வெளியே இருவரிடம் காணும் அன்யோன்யம் ஆச்சர்யமாயிருக்கும். அந்தரங்கத்தை அறிந்துகொண்டால் ராஜீய வாழ்வில் கசப்பு காணாது.

* * * *

சட்ட சபையுடன் நிற்கவில்லை. துறை கண்ட இடமெல்லாம் சேவை செய்யப் புறப்பட்டார். நகர சபையில் நுழைந்தார். சர்வகலா-சாலை வேலையில் சிரத்தை கொண்டார். மக்களின் க்ஷேமலாப விருத்தியில் கவலை காட்டிய எந்த ஸ்தாபனத்திலும் அவருக்குப்பங்குண்டு. சலியாத சேவை;ஓய்வு அறியாத உழைப்பு. பம்பரம்போல் சுற்றிவந்தார். பத்திரிகைகளில் அவர் பெயர் காணாத நாள் கிடையாது. ஒழிந்த நேரத்திற்கு வியாஸம் எழுத உட்கார்ந்து விடுவார். இடைவிடாத வேலைக்கு உடல் வலு இடம் தரவில்லை; ஆற்றல் மிகுதியால் அலக்ஷியம் செய்து வந்தார்.

வியாதி ஊன்றிக்கொண்டது. பெரிய மனிதர்கள் அந்தஸ்தை வியாதியில் சுலபமாகக் கண்டார். ஹிருதய நோயும், நீரிழிவும், ஆகாரத்தையும் அடக்கி, தூக்கத்தையும் கெடுத்துவிட்டன. உடல் வாட, உயிர் வடிய உழைத்தாரே, என்ன கைம் மாறு கண்டார்? சகஜமாகக் கிடைக்கவேண்டியதும் கைக்கெட்டவில்லை. காரணம் கையில் ஓட்டம் இல்லாததே. பிரபஞ்சம் பணத்தை ஆச்ரயித்து நிற்கிறது. பணம் இருந்தால் பிரபு! பதவியும் பெருமையும் தேடிவரும். பொருளில்லார்க்கு இவ்வுலகில்லை. அநுபவம் இதையே அறிவுறுத்துகிறது. நிஷ்காம சேவையில் நிம்மதி பெறுவது எல்லோருக்கும் எளிது அல்ல. பணம் இருப்பவர் பணத்தின் குறையை அறியலாம். பணம் இல்லாதவர் பணத்தின் குணத்தையே அறிவர். சத்யமூர்த்திக்கு இகப்பற்று அதிகம். சிற்றின்பத்தில் பிரியம். ஆடம்பரத்தில் ஆசை. குடி இருக்க அழகிய மாளிகை; பங்களாவாசலில் கைகட்டிய சேவகன். வெளியே செல்ல வாகனம்; விருந்து வைக்க வசதி; ஊரார் கொண்டாட அந்தஸ்து; உறவினருக்கு உதவும் வியாபகம். இவை ஒன்றும் பிரமாதமல்ல. நியாயமான எண்ணங்கள். சுலப சாத்தியமானவை. ஆனால் சத்யமூர்த்தி சம்பந்தப்பட்டவரையில் ஒவ்வொன்றும் பெரிய காரியமாகி விட்டது.

காரணம் என்ன? ஊராருக்கு உழைத்ததுதான் காரணம். சொந்த சௌகர்யங்களுக்கு சம்பாதித்துக்கொள்ள சாவகாசமில்லை. யோக்யதைக்குக் குறைவில்லை. காலக்கிரமத்தில் நல்ல வரும்படி வந்திருக்கும். கார்த்திருக்கவில்லை. ஊர் வேலையை இழுத்துப் போட்டுக்கொண்டார். அது அவரை இழுத்துக் கொண்டு போய் விட்டது. வஞ்சனை இல்லாமல் உழைத்தார். குறைவில்லாமல் காலக்ஷேபம் நடக்கும் என்ற நம்பிக்கை. எதிர்பார்த்த அளவு கூடிவரவில்லை. ராஜீய சேவை அவ்வளவு அங்கம் பெறவில்லை. ஏழை நாடு; எளியோர் கக்ஷி; எவ்வளவு தூரம் ஈடு கொடுக்கும்? நன்றி காட்டினர் பலர்; நண்பர் சிலர் உதவினர்; என்றாலும் நிலையில்லாத வாழ்வாக இருந்தது. தயவு தாக்ஷிண்யத்தில் கௌரவ காலக்ஷேபம் சாத்தியமில்லை. அதிகமாய் எதிர்பார்த்து ஆயாசப் பட்டார் சத்யமூர்த்தி. ஸேவா பக்குவம் வைராக்கியபர்வம் எட்டவில்லை. அவருடைய சேவையை, கேவலம் ஒரு லௌகிக ப்ரவ்ருத்தியாக சிலர் நினைக்கிறார்கள். இதைவிட அபாண்டமான அபவாதம் வேறு இல்லை. பொது நலத்தை விட்டுக் கொடுத்து தன் நலத்தைத் தேடிக்கொள்ள எவ்வளவோ சந்தர்ப்பங்கள் குறுக்கிட்டன. அசைந்து கொடுத்தாரில்லை. உண்மையான தேசப் பற்று. உறுதியான தேசத்

தொண்டு. கலங்கா நெஞ்சுடன் காங்கிரஸ் கொடி தாங்கி, களங்கமற்ற சேவை செய்தார். சத்யாக்ரகம் செய்து, சிறை சென்று, நோய் வாய்ப்பட்டு இன்று ஆஸ்பத்திரியில் கிடக்கிறார். சீக்கிரம் குணமடைந்து வெளியேறி, எஞ்சி யிருக்கும் காரியத்தை வெற்றிகரமாய் நடத்த வேண்டும் என்பதே மக்களின் பிரார்த்தனை.

ஸர் பி. எஸ். சிவஸ்வாமி ஐயர்

8

ஸர் பி. எஸ். சிவஸ்வாமி ஐயர் *

நிறைகுடம் ததும்பாது என்பர். நீருக்குப் பதில் நெய் நிறைந்திருந்தால் கேட்க வேண்டுமா? ஆட்டினாலும் ஆடாது. உறைந்த நெய் நிறைந்த குடத்திற்கு சமானமாகச் சொல்லலாம் ஸர் பி. எஸ். சிவஸ்வாமி ஐயரை. பழய பெரிய பரம்பரையைச் சேர்ந்தவர். ஞானத்தை கேவலம் ஒரு லௌகிக சாதனமாகக்கொண்டவர் அல்ல. இளமையிலிருந்து படிப்பிலே ருசி; படிக்கப் படிக்கத் திகட்டவில்லை. இன்றைக்கும் புத்தகமும் கையுமாகப் பார்க்கலாம் அவரை. வயது 78 ஆகிறது. ஞானம் சுரக்கச் சுரக்க, நிதானம் பூத்து, காய்த்துக் கனிந்து விட்டது. நாக்கிலே நயம் என்றைக்கும் உண்டு. நடத்தையிலே நாணயம் பரம்பரை தர்மம். ஆசார்ய ஸ்தானத்திற்கு பக்குவம் பெற்றவர். அவருக்கும் பற்றும் பிரசக்தியும் அந்த வழியில்தான். ஆனால் வாழ்வு வேறாக வகுக்கப்பட்டிருந்தது. யோக்-

★ 15-2-42 அன்று 'சுதேசமித்திரன்' வாரப்பதிப்பில் வெளிவந்தது.

யதையுடன் யோகமும் சேர்ந்து கொண்டது. பதவி ஏறி, பட்டம் பெற்று, பழமானேரிக்குப் புகழ் தேடினர். சந்தர்ப்பங்கள் பல ஏற்பட்டன. சம்பந்தங்கள் பல முளைத்தன. ஸம்யோகம் ஒன்றிலும் நிலைக்கவில்லை. அகண்ட காவிரியை அழகாகக் கொண்ட ஸ்ரீரங்கம் கோவில் போல் நிற்கிருர். சுற்றுமுற்றும் வெள்ளம் வழிந்து ஓடலாம். அவரைத் தீண்டவில்லை. நிலையில்லாத சக்தியில் நம்பிக்கை இல்லை. நிதானமே பிரதானம். சாந்தமே சித்தாந்தம். நெருங்கிப் பழகிய சிலரே அறிவர். முகத்திலே கடுப்பு காணுது. மனதிலே கல்மஷமில்லை. பேச்சிலே தடிப்பில்லை. கார்யத்திலே பரபரப்பில்லை. மனே வாக்காய சுத்தமே மதிப்புக்குக் காரணம்.

* * * *

1864--இல் பிறந்தார். 1885—ஆம் வருஷம் வக்கீல் தொழிலில் இறங்கினுர். 1907-ஆம் வருஷம் அட்வொகேட்-ஜெனரல் பதவி ஏற்ருர். 1912-ஆம்வருஷம் சென்னை நிர்வாகசபை அங்கத்தினர் ஆனுர். 1917-ஆம் வருஷம் வேலையிலிருந்து விலகிக்கொண்டார். வக்கீல் தொழிலுக்கு திரும்பவில்லை. சம்பாதிப்பதில் சிரத்தையில்லை. குடும்ப-பாரம் இல்லை. கௌரவ காலக்ஷேபத்திற்கு வேண்டியது சேர்ந்துவிட்டது. பணத்தில் பிரமை இல்லை; ஆனுல் பிடிப்பு உண்டு. அளவுக்கு மிஞ்சி

அள்ளி விடமாட்டார். அண்டிக்கேட்டோருக்கு இல்லை யென்றும் சொல்லமாட்டார். நிதானம் அதிலும் காணலாம். அவர் வக்கீல் வேலை புரிந்த போது, பெரிய பெரிய மேதாவிகள் தொழிலில் ஈடுபட்டிருந்தனர். பாஷ்யம் ஐயங்கார், மணி ஐயர், கிருஷ்ணசாமி ஐயர், சுந்தரம் ஐயர், சங்கரன் நாயர் முதலானோர் வக்கீல் வேலை செய்து வந்தனர். இவர்களிடையே பெயர் எடுப்பது எளிதல்ல. காலக்கிரமத்தில் நல்ல பெயர் எடுத்தார். கக்ஷியாடும்போது, நியாய வாதிக்கும் நீதிபதிக்கும் உள்ள தொடர்பு தெளி-வாகத் துலங்கும். வாதத்திலே அதிவாதம் காணுது. யுக்திவாதம் கிடையாது. நடுக்கண்ட நியாயத்தையே விளக்கிக் கூறுவார். ஆர அமர யோசித்து, ஒவ்வொரு வார்த்தையையும் அளந்து பேசுவார். அவசரப்படமாட்டார்; ஆத்திரப் படமாட்டார். குறைத்தோ, கூட்டியோ பேச மாட்டார். அவரிடத்தில் கக்ஷிக்காரனுக்கும் மதிப்பு உண்டு. நீதிபதிக்கும் மரியாதை உண்டு. நிதானம் ஸர்வார்த்த ஸாதகம்.

* * * *

கவர்ன்மெண்டிடம் சலுகை பிறந்தது; பதவி தேடி வந்தது. அகம்பாவம் கொள்ளவில்லை. செய்வதை திருந்தச் செய்தார். அவ்வளவுதான். பதவிக்கேற்ற பொறுப்பு காட்டினுர். இந்தியரின்

தாகூ

யோக்யதையை மெய்ப்பித்தார். பொறுப்பைப் பெருக்கிக்கொள்ள முயலவில்லை. இந்தியருக்கு ஸ்தானம் அளித்தது இலாகா நிர்வாகத்தை உத்தேசித்து மாத்திரம் அல்ல; இந்திய அபிப்பிராயம் பொதுவாக நிர்வாகம் முழுவதிலும் பிரதி பலிக்கவே. அதற்குப் பிரயாசைப் பட்டதாகக் காணவில்லை. ஐந்து வருஷம் பதவி வகித்தார். இருந்த சோடு காணவில்லை. நிர்வாகப் போக்கு மாறவில்லை. முற்போக்கு காணாததே குறை. பிற்போக்கு கண்டது ஏமாற்றமாக முடிந்தது: அதிகாரத்திலே அமுல் இல்லை. சந்தேகம் ஒருபுறம்; சங்கோசம் ஒரு புறம்' தட்டிப் பேசத் தைர்யமில்லை; எட்டிப் பார்க்கத் தரிசனம் இல்லை. உத்தியோக லக்ஷணங்கள் அமைந்திருந்தன. லக்ஷியங்கள் இல்லை. உத்தியோகம் அவருக்குப் பெரிதல்ல; காப்பாற்றிக்கொள்ள வேண்டுமென்ற நிர்ப்பந்தமுமில்லை. அப்படியிருந்தும் ஸேவார்த்திக்கு அபூர்வ சந்தர்ப்பம் வாய்த்ததாக அவர் நினைக்கவில்லை. காரணம் மக்களுடன் நெருங்கிய தொடர்பு இல்லாதது தான். படிப்பு பயன்படவில்லை. சுபாவம் இடம் தரவில்லை. ஏதோ வேலை பார்த்தார்; செய்த வேலையில் பழுதில்லை; கால கெடுவில் விலகிக்கொண்டார். விலகியது வருத்தம் உணர்த்தவில்லை.

தொழிலுக்குத் திரும்பவில்லை. தாம் கற்ற கல்வி பிறருக்கு உதவவேண்டும் என்ற ஆசை பிறந்தது. ஆனால் ஓய்வு கண்ட நேரத்தில் துறை ஒதுங்கிவிட்டது. நாட்டிலே புதிய சக்தி புகுந்துவிட்டது. உபதேசம் மாத்திரம் எடுக்க-வில்லை. உத்சாகம் வயதேறியவர்களிடையே எதிர்பார்ப்பதற்கில்லை. கவர்ன்மெண்டின் நன் மதிப்புக்குப் பாத்திரமானவர் கவர்ன்மெண்டி-டம் நம்பிக்கை இழப்பதும் சிரமம். எவ்வளவுக் கெவ்வளவு கவர்ன்மெண்டிடம் நம்பிக்கை பாராட்டினரோ, அந்த அளவுக்கு மக்களுடைய நம்பிக்கை இழந்தனர். பொதுவேலையில் ஈடு-படவும் கவர்ன்மெண்டின் தயவு தேவையாகி விட்டது. ஒரு முறை இந்தியா சட்டசபையில் நியமனம் பெற்று ஸ்தானம் வகித்தார். சுயராஜ்-யக்கக்ஷி சரித்திரம் எழுதிய சமயம் அது. ஞான வைராக்கியத்தினால் அங்கும் நல்ல பெயர் எடுத்தார். ராணுவத் துறையில் கவனத்தைத் திருப்பி ஊழல்களை வெளியாக்கி, போற்றற்குரிய சேவை புரிந்தார். மறு முறை நியமனம் ஆகவில்லை. மக்களுடைய ஆதரவை நாடவும் மனம் துணிய வில்லை. கல்வித்துறையில் என்றைக்கும் சிரத்தை உண்டு. சர்வகலாசாலை பிரதிநிதியாக சென்னை சட்டசபையில் ஸ்தானம் ஒரு முறை வகித்தார். சென்னையிலும், காசியிலும், சர்வகலாசாலைகளின்

உப அத்யக்ஷகராக நிர்வாகப் பொறுப்பை ஏற்று நடத்தினார். அவருக்கு ரஸிக்கவில்லை: பிறருக்கும் ருசிக்கவில்லை. அந்தத் தொடர்பும் விட்டது. கல்வித்துறையில் சிரத்தைக்கு அடையாளமாக, தாமே ஒரு பள்ளிக்கூடத்தைத் திருக்காட்டுப் பள்ளியில் நிறுவி நடத்தி வருகிறார்.

* * * *

ராஜீயத்துறையில் அவர் மனதிற்கு இசைந்த கக்ஷி மிதவாத சம்மேளனம் தான். முத்தண்ணுக்களின் சபை! முத்தண்ணுக்களில் மூத்தவர் சிவஸ்வாமி ஐயர்! இரு முறை தலைவர் பதவி வகித்திருக்கிறார். சென்னையில் சமீபத்தில் கூடிய சம்மேளனத்திற்கு உபசரணை சபைத் தலைவராக இருந்தார். விஷயத்தை விளக்கி விதாயகம் விதிப்பதில் வித்வான். ஆனால் கரடியாகக் கத்தினாலும் கேட்பார் இல்லை. மாண்டேகு காலத்தில் கக்ஷிக்கு இருந்த செல்வாக்கு இன்று இல்லை. வெள்ளம் வழிந்தோடுகையில், கரையி-லிருப்போரைக் கவனிப்பாரில்லை. மிதவாதம் என்றால்,வாதத்தில் மிதம் அல்ல, வேகத்தில்தான் மிதம் என்பது தெளிந்துவிட்டது. கவர்ன் மெண்டாருக்கும் புளிப்பு விட்டுவிட்டது. சாக்ஷிக்காரனை விட சண்டைக்காரனுடன் சமாதானம் செய்து கொள்வது மேல் என்று எண்ணுகின்றனர். மிதவாதிகள் விடுவதாய் இல்லை. சமா

தானத்திற்கு வழி சொல்லி வருகின்றனர். இந்தியா சம்பந்தமாக எந்தப் பிரச்னை எழுந்தாலும், அவர்கள் அபிப்பிராயம் கூறுவது நிச்சயம். அவர்கள் பணி அவ்வளவு தான். சிவஸ்வாமி ஐயரும் தம் அளவில் இதைத் தயங்காது செய்து வருகிறார். அபர வயதில் அவர் செய்து வரும் சேவை பெரிது. ஏக தேசத்தில் அவரிடம் மக்களுக்குள்ள மதிப்பு என்றைக்கும் குறையவில்லை: குறையவும் குறையாது.

9

ராவ் பஹதூர் ஜி. ஏ. நடேசன்*

ஜி. ஏ. நடேசன் தஞ்சாவூர் ஜில்லாவில் பிறந்தவர். பூர்வீகம் கணபதி அக்ரஹாரம்; அவ்விடத்தில் இன்றைக்கும் சிறிது பூஸ்திதி உண்டு. ஆனால் சென்னையில் வேர் ஊன்றி 50 வருஷங்களுக்கு அதிகமாகி விட்டது. ஆதியில் மேல் படிப்புக்காக சென்னைக்கு வந்தார். பிழைப்பும் இங்கே ஏற்பட்டு விட்டது. மாணவராக இருந்தபோதே வாழ்வின் லக்ஷணங்கள் அமைந்துவிட்டன. நான்கு பேருடன் நெருங்கிப் பழகுவதில் நிபுணர்: யாராயிருக்கட்டும், என்ன பதவி வகிக்கட்டும், அணுக அஞ்சமாட்டார். அணுகவேண்டியதுதான் தாமதம், அந்தரங்கம் பாராட்டுவார். அன்யோன்யம் பிறந்து விடும். அவருடைய ஜாதக விசேஷம் அது. அந்தஸ்தோ, செல்வாக்கோ உள்ளவர் அவரை அறியாமல் இருக்க முடியாது. விடமாட்டார் அவர். காரியவாதி என்று நினைப்பதும் தவறு. கார்யத்தில்

*1-3-42 அன்று 'சுதேசமித்திரன்' வாரப்பதிப்பில் வெளிவந்தது.

ராவ்பஹதூர் ஜி. ஏ. நடேசன்

கருத்துண்டு. காரியமே கருத்தல்ல. பழகுவதில் பிரியம். பழக்கம் பயன்பட்டால் தவறென்ன? பயன்படக்கூடியவர்களிடம் பழகினால் தான் தவறென்ன? பழகிய பலர் அவருக்கு உதவியிருக்கலாம். பழகிய பலருக்கும் அவர் உதவியிருக்கிறார். பட்டணத்திலே பலரைப் பெரிய மனிதராக்கிய பெருமை அவருக்கு உரித்தாகும். கலாஞானத்தை விட கால ஞானம் மிகுந்தவர். சென்னையில் அவர் கொடியேற்றியபோது பொது வாழ்வு உருப்பெறவில்லை. கக்ஷியொன்-றுக்கும் வலுவில்லை. கிளர்ச்சி எதற்கும் கூர் காணவில்லை. மேதாவிகள் இருந்தனர். ஸேவை-யில் சிரத்தையும் கொண்டனர். ஸேவைசோபிக்க சேர்த்து வைக்கும் சக்தி தோன்றவில்லை: பலரு-டைய நன்மைக்கு உழைப்பது சொந்த நன்மைக்கும் உதவலாம். இந்த உண்மையைத் தான் கடைந்தெடுத்தார் நடேசன். கலாசாலையில் பிரமாதமாகப் படித்துவிடவில்லை;பிரசஸ்தமாகப் 'பாஸு'ம் பண்ணிவிடவில்லை. அவர் கற்றது ஏட்டில் அடங்காதது. அனுபவத்தைத் தழுவி-யது. மாணவர் பக்குவத்தில் இந்த அநுபவம் நேர்ந்தது அதிர்ஷ்டம்.

*   *   *   *

பி. ஏ. பரீக்ஷை 'பாஸ்' பண்ணினார். சட்ட கலாசாலை மீது நாட்டம் முதல் சென்றது.

வக்கீல் படிப்பில் அந்த காலத்தில் "மவுஸ்" ஜாஸ்தி. நெரிசல் காணத் தொடங்கவில்லை. சுவாதீன விருத்தி; நல்ல வருவாய்; இருந்தாலும் நடேசனுக்கு சிரத்தை கொள்ளவில்லை. உத்-யோகத்திற்கு ஆசைப்பட்டிருந்தால் சுலபமாகக் கிடைத்திருக்கும். அதையும் ப்ரதீக்ஷிக்கவில்லை. புது வழியில் புகுந்தார். யோசித்தே இறங்கினர் என்பது என் துணிபு. பல தரப்பினருடன் அவருக்கு உறவு உண்டு. சிலருடன் பற்றும் பரிவும் அதிகம் இருக்கலாம். யாருடனும் வேற்று-மையோ விரஸமோ பாராட்டும் சுபாவமல்ல. இப் படிப் பழகியதில் குணம் இருந்தது. வேற்றுமை களிடையே ஒற்றுமையைக் கண்டார். இந்தியா-வின் மறு மலர்ச்சியின் சோடு அவர் கண்ணுக்-குப் புலப்பட்டது. அதற்கு ஊட்டம் அளிப்பதில் நாட்டம் சென்றது. விருத்தியிலுள்ள விசேஷம் குறிப்பிடத்தக்கது. சேவையில் பெயரும் உண்டு, பொருளும் உண்டு. புத்தகப்பிரசு-ராலயம் ஒன்றையும், அதற்கு அனுசரணையாக மாத சஞ்சிகை யொன்றையும் ஆரம்பித்தார். இரண்டையும் நடத்த, தேர்ச்சியோ அநுபவமோ கிடையாது. பரிக்ஷை பார்க்கப் பணத்தென்பும் இல்லை; இருந்தாலும் தைர்யமாக இறங்கினர். அகலக்கால் வைக்கவில்லை. 'அல்பாரம்பம் க்ஷேம கரம்' என்று ஸம்ஸ்கிருதத்தில் வாக்கியமுண்டு

ராவ் பஹதூர் ஜி. எ. நடேசன்

'சிறுகக் கட்டி பெருக வாழ்' என்று தமிழ்ப் பழமொழியும் உண்டு. நடேசனே இவைகளுக்கு பிரத்யக்ஷப் பிரமாணம். கூடி வரும் காலம், குருட்டு அதிர்ஷ்டம் என்று சிலர் சொல்வர். நான் ஒப்புக்கொள்ளமாட்டேன். காரணத்திற்கும் காரியத்திற்கும் தொடர்பு துலங்காவிட்டால் அதிருஷ்டம் என்கிறார்கள். தொடர்பு தெரியாவிட்டால் தொடர்பு இல்லை யென்று சொல்லி விட முடியாது. காலப் போக்கை அறிந்து காரியத்தில் இறங்கினார் நடேசன். தைரிய லக்ஷ்மி துணை புரிந்தாள். தொட்டது துளுத்தது; சிரமப்பட்டார்; சம்பாதித்தார்; சோறு காணாது சம்பாதித்தார். யார் கண்ணையும் உறுத்தவில்லை. அண்டை அயல் காய்ச்சலில்லை. மயிலாப்பூரில் பங்களா வாங்கும் வரையில் பணக்காரர் என்று கூட பலருக்குத் தெரியாது.

* * * *

பிறர் சம்பந்தப்பட்ட வரையில் அவர் பொருள் சம்பாதித்தது பெரிதல்ல; செய்த சேவையே பெரிது. தேசீய ஞானம் பரப்பிய பெருமை அவருக்குரித்தாகும். யார் எந்தத் துறையில் சிறப்பாக ஸேவை செய்தாலும், அவர் கவனத்தைப் பெறுவது நிச்சயம். சிறு புத்தகம் ஒன்று சொற்ப விலையில் வெளிவந்து விடும்; தேச பக்தர்களின் ஜீவிய சரித்திரங்களை வெளியிட்டு

தேசாபிமானத்தை வளர்த்தார். அவருக்குத் தெரியாதவர் கிடையாது ; எல்லாரும் வேண்டி-யவர். கோகலேயும் சரி, திலகரும் சரி, காந்தி-யும் சரி - எல்லோருக்கும் அவரிடத்தில் அலாதி விசுவாஸம். பாரத நாடு பரந்த நாடு; நாடு முழுவதும் நடேசனை அறியும். வெளி நாட்டி-னரும் இந்தியாவைப்பற்றி அறிய வேண்டு-மானல் நடேசனைத் தான் அண்டுவர். இந்த வியாபகத்திலிருந்து இன்னொரு விசேஷம்! எந்தப் பொதுக் கார்யத்திற்கும் நடேசனின் ஆதரவும் ஒத்துழைப்பும் இன்றியமையாததாகி விட்டன. கூட்டம் கூட்டவோ, விருந்து நடத்-தவோ, நிதி திரட்டவோ, ஒரு காலத்தில் நடேசன் இல்லாமல் காரியம் நடக்காது. எடுத்த காரியத்தை தலைப்பொறுப்பாக முடித்து வைப்-பார். நல்ல 'நிகா'; யாரிடத்தில் எது சாயும் என்று நன்ருய் அறிவர்: ஆகாத காரியத்தில் மௌனக் 'கடமாட்டார் ; ஆகும் காரியத்தில்' ஆலஸ்யமிராது. காரியம் கூட கிருஷி பலமாக இருக்கும். தட்ட முடியாத தாக்ஷிண்யம் தேடு-வார். காரியம் கூடும்வரையில் விடமாட்டார். பேச்சிலேயே பிடிவாதத்தைக் காணலாம். சொன்னதையே திருப்பித் திருப்பிச் சொல்வார். பேச்சை மாற்ற இடங்கொடார் : எடுத்த காரி யத்தை முடித்தே மறு காரியம் பார்ப்பார் : தன்

வரையறைகளை நன்கு அறிந்தவர். பல புத்தகங்களை வெளியிட்டிருக்கிறார்: சுயமாக ஒன்றும் எழுதவில்லை: பல வருஷங்களாகப் பத்திரிகை நடத்தி வருகிறார்: பிறர் எழுதியதே பத்திரிகைகளில் பிரதானம். பல மேடைகளில் பேசியிருக்கிறார். ஆதாரங்களைக் காட்டியே பேசுவார். நாவன்மை கிடையாது. வியாபார வழியில் புத்தி படிந்துவிட்டது. பேச்சிலும் பழக்கத்திலும் அவரை அறிந்தவர் அதையே காண்பர்.

*　　*　　*　　*

பழகப் பாத்திரமானவர். சிநேகத்திற்குக் கட்டுப்பட்டவர். நயம் மிகுந்தவர்; 'தப்பு தண்டா'வுக்குப்போகமாட்டார். சரளமான சுபாவம்: குளிமையாகப் பேசுவார். வீடு தேடி வருவோருக்கு உபசாரம் பலமாயிருக்கும்; உபசரிப்பதில் ஒரு திருப்தி. விருந்து வைப்பதில் ஒரு பெருமை. வாழ்விலே வெற்றி கண்டவர். கண்ட வெற்றியில் திருப்திகொண்டவர். பெரிதாக எதுவும் எதிர்பார்க்கவில்லை. ஏமாற்றமும் இல்லை. நகரசபையில் பல வருஷங்கள் உழைத்தார். தலைவர் ஸ்தானம் கிடைத்திருக்க வேண்டும்: முட்டில் தட்டி விட்டது. சர்வகலாசாலையில் அங்கம் வகித்தார்: எல்லைக்கு மேல் ஏறவில்லை. ராஜாங்க சபைக்கு நியமனம் பெற்றார்: சபைக்கே நாட்டில் மதிப்பில்லை: 'கனம்'

பட்டம் தான் மிஞ்சிற்று. காப்பு விசாரணை சபையில் ஸ்தானம் பெற்றார்: பொறுப்புடன் நடந்து கொண்டார்; நியாயத்தை விட்டுக் கொடுக்கவில்லை. 'ராவ் பஹதூர்' பட்டம் வழங்கினர்: பட்டம் கிடைத்ததில் பெருமை கொள்ளவில்லை. ஷெரீப் 'உத்தியோகம் வகித்-தார்: மரியாதை ஸ்தானம் அது: காங்கிரஸ் கவர்ன்மெண்டார் அளித்த மரியாதை: அதனால் திருப்திப்பட ஹேது உண்டு. நடேசனுக்கு இன்று வயது 68 ஆகிறது. மொத்தத்தில் யோகசாலி யென்றே சொல்லவேண்டும். யோக-மும் சகட யோகமல்ல. இன்று மேலே ஏற்றி, நாளைக்குக் கீழே தள்ளும் தன்மையானதல்ல. படிப்படியாக ஏறு முகம் கொண்டது. திடகாத்-திரமுள்ளவர்; பூர்ணாயுசு ஜாதகம். நடேசன் வாழ்க! நாட்டுக்குத் துணை புரிக!!

வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார்

10

வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார்*

வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்காரை நினைத்தால் போதும்! மனதிலே தனி எழுச்சி தோன்றுகிறது. லோகத்திலே சுக துக்கங்கள் சகஜம். சுக துக்கங்களை ஸமமாகப் பாவிப்பது மாத்திரம் சிரமம். ஞான வைராக்கியம் வேண்டும். அநுபவ பூர்வமாகவோ அநுக்கிரக விசேஷத்தாலோ 'வி. வி.' யிடத்தில் ஸமபாவம் காணக்கிடக்கிறது. நினைத்த மாத்திரத்தில் அவரிடத்தில் ஒரு பாசமும் பற்றும் ஏற்படும் காரணம் இதுதான்: முத்தண்ணு என்று அவருக்குச் செல்லப்பெயர். எல்லாருக்கும் முத்தண்ணு. ஜாதிமதபேதம் இல்லை. முத்தண்ணு என்றால் பத்தாம் பசலிப் பேர்வழியென்று நினைக்க வேண்டாம். மாப்பிள்ளை மிடுக்கு அவரிடம் இன்றும் காணலாம். சலவை வேஷ்டி தான் கட்டுவார். அகல ஜரிகை வேஷ்டியில் பிரியம்

★ 15-3-42 அன்று 'சுதேசமித்திரன்' வாரப்பதிப்பில் வெளிவந்தது.

ஜாஸ்தி. மடிப்புக் கலையாத உடுப்பு தரிப்பார். அதன்மேல் படாடோபமான அங்கவஸ்திரம். தலையிலே சன்ன ஜரிகைக் கோடுள்ள நெட்டிப் பாகை. நெற்றியிலே கவர்ச்சியளிக்கும் நாமம். கையிலே தடி. புதிது புதிதாக நாளுக்கொன்று கொண்டு வருவார். கையில் தடியேந்தி, கண்ணாடியில் ஒரு முறை பார்த்துவிட்டு, வெளியே கிளம்பும்போது அவரைப் பார்த்தால், யார் மனம் குளிராது? சுக புருஷன் என்று சொல்லலாம். அவர் கஷ்டம் அவருக்குத்தான் தெரியும். சமீபத்தில் தர்ம பத்தினியை இழந்தார். துக்கம் கேட்கும் சம்பிரதாயம் ஒன்றுண்டு. பத்து நாளைக்குள் ஒரு நாள் போக எண்ணியிருந்தேன். தகனத்திற்கு மறு நாளே அவர் கிளப்புக்கு வந்து விட்டார்! அவரைப் பார்த்ததும் எனக்கு மூஞ்சி சற்று அசடு தட்டிற்று. ஒதுங்கப் பார்த்தேன். பிடித்துக் கொண்டார். "எனக்கு ஆறுதல் சொல்ல நீ காத்துக் கொண்டிருக்காயோ" என்றார். "எவ்வளவு அகம்பாவம் உனக்கு?" என்று மேலும் அடுக்கினார். பதில் சொல்ல நாவெழவில்லை. வருத்தம் அவர் அறியாதவர் அல்ல; வருத்தம் காட்டாதவர். சுக புருஷர் அல்ல; திட புருஷர். திடமுள்ளவர்களையே தெய்வம் சோதிக்கும். தாங்கும் இடத்தில்தான் சுமை தங்கும். சோதனையில் சோடை போக-

வில்லை. ஞானஸ்தர் என்பதற்கு என்ன தடை? பிராசீன கிரந்தங்களைப் படித்தவர். வேதாந்த விசாரணைகளில் விளக்கம் கண்டவர். வேத-மோதியவர்களிடம் உறவு கொண்டாடுபவர். வைதீக சிரத்தை மிகுந்தவர். வைதீக மென்றால் குருட்டு நம்பிக்கையும் அசட்டுப் பிடிவாதமும் அல்ல. வேஷதாரிகள் ஏமாற்ற முடியாது: விஷயம் அறிந்தவர்: விதரணை தெரிந்தவர். கீதா காலக்ஷேபத்தில் பிரியம் அதிகம். இல்லற வாழ்வுக்கும் இகதர்மத்திற்கும், கீதோபதேசமே அவருக்குத் துணை. வயதேறியும் வாலிப பர்வம் மறையாததின் மர்மம் அது தான்.

* * * *

'வி. வி.' யும் வெண்பாக்கத்தைச் சேர்ந்தவர். ஸர் வி. பாஷ்யமையங்காரையும், ஸர் வி. ஸி. தேசிகாசாரியையும் ஈன்ற ஊர். ஊர் மண் களி மண்ணல்ல : அது தெளிவு. நியாயம் வழங்கிய ஊர் என்றும் சொல்லலாம். ஏனெனில் மற்றிருவரைப் போல் 'வி. வி.' யும் வக்கீல் தொழிலே நடத்தினர். யாருடைய தயவையும் பிரதீக்ஷிக்க வில்லை. அப்பீல் கோர்ட்டில் வேலை வரக் காத்திருக்கவில்லை: அசல் கோர்ட்டில் ஆரம்பித்தார். வியாபாரிகளின் நம்பிக்கையைப் பெற்றார்: கிரிமினல் பிராக்டீஸும் செய்தார். குறுக்கு விசாரணையிலும் கக்ஷியாடுவதிலும்

நல்ல பெயர் வருவாய்க்குக் குறைவில்லை. மதிப்பும் பெருகி வந்தது. ஹைகோர்ட் ஜட்ஜ் வேலையும் அவரைத் தேடி வந்தது. சொற்ப காலமே பதவியில் இருந்தார். தொழிலுக்கே மீண்டும் திரும்பினார். இன்றைக்கும் ஊர் ஊராகக் கேஸ் நடத்தச் சென்று வருகிறார். இதென்ன வினைகெட்ட வேலை, ஓய்வில்லையா, ஒழிவில்லையா, என்று கேட்கலாம். கேட்கவே கேட்டேன். "சம்பாதித்தே என் காலக்ஷேபம் நடக்கும். நான் பெற்ற வரம் அது" என்றார். ஆச்சர்யமான கூற்று! ஆனால் உண்மை அடங்கியது. ஆயுசு முழுவதும் சம்பாதித்திருக்கிறார். லக்ஷக்கணக்கில் சம்பாதித்திருக்க வேண்டும். சேமிக்கவில்லை. சேமித்தாலும் நிலைக்காது என்ற நம்பிக்கை அவருக்கு. வருமானத்தில் ஒரு பகுதியை ஒதுக்கி வைத்தால் அது கரையும் வரையில் மேற்கொண்டு வேலை வருவதில்லை என்றார் என்னிடமே ஒரு முறை. மீதம் பிடிக்காமல் செலவழித்தால் செலவுக்குத் தட்டாமல் பணம் கிடைத்து வருவதாயும் சொன்னார். இறைத்த கிணறு சுரக்கும் என்பார்கள். 'வி. வி.' அதற்குப் பிரத்தியக்ஷப் பிரமாணம் போலும்! அக்ஷயபாத்திர அநுக்கிரகம்! பரத்தில் பற்றுள்ளவர்களுக்கு இதுவே யோகம் என்று சொல்லலாம். பிரபஞ்சத்தில் பணமே பிரதானம். பணம்

சேரக் குணம் சரியும் என்பார்கள். பொருள் ஈட்டுவோர் அருள் இழப்பது அநுபவம். பணத்திற்குத் தட்டில்லாமல், குணத்திற்கு மட்டில்லாமல் வாழ வரம் பெற்றால், வேறு என்ன வேண்டும்? சம்பாதித்த செல்வமெல்லாம் செல்வேன் செல்வேனென்று சென்ற வண்ணமிருந்தது. இல்லையென்று சொல்ல வாய் வராது மன்னனுக்கு. கையிலில்லாவிட்டாலும் மறு முறை வரவே வாய் பேசும். விதரணையறியாத செலவு; ஊதாரித்தனமான செலவு; உருக் காணாத செலவு. சம்பாதித்தே செலவழித்தார். குறை கூற யாருக்கு வாய் உண்டு?

* * * *

மூத்தண்ணாவிடத்தில் எனக்கு மாத்திரம் தீராத குறை ஒன்று உண்டு. அறிவும் அநுபவமும் உள்ளவர்களுடைய சேவை நாட்டுக்கு இன்றியமையாதது. பராதீனப்பட்ட நாட்டிலே ராஜீய வாழ்வே பிரதானம். ராஜீய வரையறைகள் எந்தத் துறையிலும் முயற்சியையும் முற்போக்கையும் வழி மறிக்கின்றன. வியாபாரிகளும் காலக்கிரமத்தில் இதையறிந்து ராஜீய இயக்கங்களில் கலந்து வருகின்றனர். வக்கீல் தொழில் புரிவோர் ராஜீய ஸேவையில் ஈடுபடுவது சகஜம். காரணம் உண்டு. வக்கீல்கள் கக்ஷியாடத் தேர்ந்தவர்கள். வகாலத்து வாங்கிப்

பேசுவது பிழைப்பு: நாட்டுக்கு வகாலத்து வாங்கிப் பேசுவதில் ஆச்சர்யமில்லே. முத்தண்ணு ஏன் முன் வரவில்லே? ஆச்சர்யம் அல்லவா அது! செல்வாக்குண்டு. சம்பாத்தியத்தில் குறைவு இல்லே. செலவழித்ததும் கணக்கில்லே. உருவான வேலே எவ்வளவோ செய்திருக்கலாம். செய்ய வில்லே. அது போகட்டும். பொது வாழ்வில் பங்கெடுக்கப் பிரியப்படுவோருக்கு எவ்வளவோ துறைகள் உண்டு. நகர க்ஷேமத்தில் அக்கறை காட்டியிருக்கலாம்: நகரசபையில் நுழைய வில்லே. வித்தியாபிவிருத்தியில் கவனம் செலுத்தி இருக்கலாம்; சிரத்தை கொள்ளவில்லே. நாடகக் கலே யொன்றில்தான் சற்று நாட்டம் சென்றது. பல வருஷங்களாக, சுகுண விலாஸ சபையின் உப தலேவர். நடைச் சித்திரங்கள் பல எழுதி வெளியிட்டிருக்கிருர். அவை நடிக்கப்பட்டு, பலர் ரஸித்திருக்கின்றனர். சுவை நிறையப் பேசவும் எழுதவும் சக்தி வாய்ந்தவர்: சக்தியும் செல்வாக்கும் இருந்தும் பொது மக்களுக்குப் பயன்படவில்லேயே என்பதுதான் என் குறை. சுபாவம் இடம் தரவில்லே போலும்! தன்னந் தனியே நிற்பவர்: தம்மாலியன்றதைச் செய்பவர். கூட்டுறவிலும் கட்டுப்பாட்டிலும் நம்பிக்கையில்லே. எவ்வளவு செய்தும் நிரக்க வில்லே. வயதேறி வருகிறது. இன்று 71 வயது

ஆகிறது. கட்டுத்தளராமல் கஷ்டமறியாமல் காலக்ஷேபம் நடக்கவேண்டுமென்பதே பலர் பிரார்த்தனை !

11

ஸர் ஸி. பி. ராமஸாமி ஐயர்*

செல்வத்திலே பிறக்கும் பிள்ளைகள் பெரும்பாலும் செல்லப் பிள்ளைகள்: கஷ்டம் அறியாதவர்கள். குணம் படியாதவர்கள்; கோணல் மிகுந்தவர்கள். சிரமப்பட்டுப் படிப்பதில்லை: சிறப்பாகத் தேறுவதில்லை: உத்தியோகம் பெறச் செல்வாக்கு உதவவேண்டும். இது கண்கூடு! ஆனால் விதியெதற்கும் விலக்குண்டு. அதற்கு, திவான் ஸர் ஸி. பி. ராமஸாமி ஐயரை உதாரணமாகக் குறிப்பிடலாம். பெரிய பரம்பரையில் பிறந்தார் அவர். தகப்பனார் பிரபல வக்கீல். தகப்பனுக்கு ஒரே பிள்ளை; பிள்ளையும் பெருமைப்படக்கூடிய பிள்ளை. மன்மத வடிவம்; அகன்ற நெற்றி; அடர்ந்த புருவம்; உருண்ட கண்கள்; 'மூக்கும் முழியும்' வசீகரம் வாய்ந்தவை. செல்லப் பிள்ளை தான்; ஆனால் சோடை போகவில்லை. நல்ல படிப்பாளி; பரீக்ஷைப்

* 29-8-42-அன்று 'சுதேசமித்திரன்' வாரப்பதிப்பில் வெளிவந்தது

படிப்போடு நிற்கவில்லை; பரந்த படிப்பு; பல பாஷைகளில் பரிசயம்: படிப்பிலே ஒரே ஒரு ஊனம். விசாலத்திற்கேற்ப வேர் விடவில்லை. வினயம். வளரவில்லை; வியாபகம் பெறவே உதவிற்று. லௌகிக ஞானமே முதிர்ந்தது. பேசவும் பழகவும் கற்றுக்கொண்டார். நன்றாகப் பேசுவார். சுவை நிறைந்த பேச்சு. சமயோசிதமாகப் பேசுவதில் சமர்த்தர். பேச்சிலே விஷயம் இருக்கும்; விளக்கம் காணலாம்; கற்பனை கதிர் விடும்; கேட்க ரஸிக்கும். பேசும்போது நாதம் கட்டும்; பரஸ்பர பந்தம் பிறக்கும். எது எங்கே ஏறும் என்பதை நன்றாய் அறிவார். சந்தேகமோ சங்கோசமோ கிடையாது. தன் நம்பிக்கை கொண்டவர். பிறர் நம்பிக்கை கொள்ள அதுவே அஸ்திவாரம். இயற்கையில், முகவெட்டும் மனோவசியமும் மிகுந்தவர். வாழ்விலே அதன் பூராப் பயனையும் பெற வழி தேடிக்கொண்டார். நாடகமேடையிலே ராஜ வேஷம் தரித்தவர், தான் ராஜா என்று நினைத்தால்தான் வேஷம் பலிக்கும்: பேச்சும் நடிப்பும் சுபாவமாக இருக்கும். உலகமே அரங்கம்; வாழ்வே நாடகம்; தானே ராஜா என்ற நினைவு அவருக்கு. பிரபஞ்ச நாடக மேடையில் ஆடியாடி, வேஷம் வேறு, உரு வேறு என்பதை அவரே மறந்து விட்டார். லோகமே மாயை

என்று வேதாந்திகள் ஸித்தாந்தம் செய்தனர். இகப்பற்றுடன் நின்றுவிட்டார் 'ஸி. பி.': பரத்தில் கருத்து செல்லும் பர்வம் எட்டவில்லை.

* * * *

வாழ்விலே ஒவ்வொரு சந்தர்ப்பம் வாய்ப்பது உண்டு. பயன்படுத்திக் கொள்பவருக்குப் பெயரும் பெருமையும் உண்டு. எல்லோருக்கும் வாய்ப்பதில்லை. வாய்த்தவர் எல்லோரும் பயன்படுத்திக் கொள்வதுமில்லை. 'ஸி. பி.'க்கு அப்படி ஒரு சந்தர்ப்பம் வாய்த்தது. பூராவும் பயன் படுத்திக்கொண்டார். சென்னையில் வக்கீல் தொழில் நடத்தி வந்தார். வருவாய்க்கு உடனே வழி காண நிர்ப்பந்தமில்லை. பொறுத்துப் பெயர் எடுக்கப் பிரயாசைப்பட்டார். தொழில் முறையை நன்றாகக் கற்றுக்கொண்டார். மரியாதை காட்டி மதிப்புப் பெற்றார். கட்டுப்படிக்காமல் கேஸ் நடத்தமாட்டார். வெளியே வலைய வந்தும், வேலைக்கு வேளை உண்டு. தனுக்காகப் பேசுவார்: எடுப்பாக இருக்கும். வாதிக்கும் முறையும் வாதத்தின் மிதமும் வசியப்படுத்தும். கக்ஷியாடுவது கடமையெனவே கருதினார். வெற்றியில் விரைப்புக் காணாது. தோல்வியில் வாட்டமுறமாட்டார். அவர் நடத்திய கேஸ் ஒன்று பெரிய பரபரப்பை உண்டாக்கிற்று. விவகாரத்தில் விசேஷமில்லை. விசேஷம் எதிராளிக்கு இருந்த

ஸர் ஸி. பி. ராமஸாமி ஐயர்

செல்வாக்கு: பிரம்மஞான சங்கத்தின் தலைவி. சங்கத்திற்கு நாடெங்கும் கிளைகள்; உலகெங்கும் அங்கத்தினர்கள். நடத்திய கேஸை 'ஸி. பி.' ஜயித்தது விசேஷம் அல்ல. மேல் கோர்ட்டில் தீர்ப்பு நிலைக்கவில்லை. எதிராளியை ஜயித்தது தான் விசேஷம். அன்று முதல் அவருக்கும் பெஸண்டம்மையாருக்கும் பிறந்த தொடர்பு ஆயுள் உள்ளளவும் மாறவில்லை. அன்று வரை ராஜீய விவகாரங்களில் தலையிடாத டாக்டர் பெஸண்ட், இந்திய விடுதலைப்போரில் ஈடுபட்டார். புதிய துறையில் 'ஸி. பி.'யைத் துணையாக வரித்தார். பிறந்தது யோகம் அதிலிருந்து. ராஜீய ஸேவை புதிய பக்குவமும் பரிமாணமும் பெற்றது. கிளர்ச்சிக்குக் கூர் கட்ட 'நவ இந்தியா' என்ற பத்திரிகை வெளிவந்தது. விளம்பர உலகம் இது. ஸேவை புரிந்தால் போதாது. தமுக்குப்போடவேண்டும். 'ஸி. பி.'யின் ஸேவையையும் சாமர்த்தியத்தையும் உலகமறியச் செய்தார் டாக்டர் பெஸண்ட். சுயவாட்சி சங்கத்தை ஸ்தாபித்தார் அவர்: 'ஸி. பி.' அதற்குக் காரிய தரிசி. காங்கிரஸ் அக்கிராசன பதவி கிடைத்தது அம்மையாருக்கு: 'ஸி. பி.' காங்கிரஸ் காரியதரிசி ஆனார். மாண்ட்போர்டு அரசியல் திட்டம் கர்ப்பத்திலிருந்தது; சாக்ஷியம் சொல்லச் சீமைக்குச் சென்றார் 'ஸி. பி.' நொடிப்பொழுதில்

பெரிய தலைவராகி விட்டார். பார்ப்பவருக்கும் கேட்பவருக்கும் பிரமை தட்டிற்று. புதிய சகாப்தத்தில் பதவியும் பட்டமும் தொடர ஆரம்பித்தன.

* * * *

அரசியல் திட்டம் அமுலுக்கு வந்தது. காங்கிரஸ் விலகி நின்றது. காங்கிரஸி-லிருந்து அவர் விலகிக்கொண்டார். பிராம்மணரல்லாதார் இயக்கம் அன்று உச்சஸ்தாயியில் இருந்தது. சட்டசபையில் பிராம்மணர் நுழைவதென்றால் பகீரதப் பிரயத்தனம். தைரியமாகச் சட்டசபைக்கு நின்றார் 'ஸி. பி.': பயமுறுத்திப் பார்த்தனர்: இல்லாததையும் பொல்லாததையும் சொல்லத் துணிந்தனர். 'ஸி. பி.' அசையவில்லை. துப்பாக்கியும் கையுமாகப் பிரசங்கம் செய்து வந்தார். வெற்றி கிடைத்தது. தைர்ய லக்ஷ்மி ஜயலக்ஷ்மியாக மாறி, பாக்கிய லக்ஷ்மியாகவும் தோன்றினாள். 'ஸி. பி.' அட்வொகேட் ஜெனரலாக நியமிக்கப்பட்டார். அடுத்தபடியாக நிர்வாக சபை அங்கத்தினராக நியமனம் பெற்றார். அவருடைய உத்தியோக காலத்தில்தான் பைகாராத் திட்டமும், மேட்டூர்த் தேக்கமும் உருப்பெற்றன. இரண்டையும் அரங்கேற்றிய பெருமை அவருக்குரித்தாகும். இரண்டும் உள்ளளவு அவருக்கு அழியாப்புகழ் உண்டு.

உத்தியோகம் காலவரையுள்ளது: துறக்கும் காலம் வந்ததும் தொழிலுக்குத் திரும்ப நேர்ந்தது. தொழிலில் செழிப்புக் கண்டாலும் கவர்ச்சியளிக்க வில்லை. புத்திப்பிரவ்ருத்தி பெரும் போக்கில் படிந்துவிட்டது. ராஜீய ஸேவைக்கோ துறை காணவில்லை. ஸர்வம் காந்தி மயம் ஜகத். ஸேவைக்குத் தியாகமே உரைகல்லாகிவிட்டது. மிதவாதிகளிடையே தீவிர வாதியாகவும், தீவிர வாதிகளிடையே மிதவாதியாகவும் அவர் இருந்தார். இடைக்கட்சிக்கு இடம் இல்லாது போய்விட்டது. டாக்டர் பெஸண்டுக்கும் செல்வாக்கு அடங்கி விட்டது. என்ன செய்வார்? 'புத்தி: காலாநுஸாரம்' என்று சொல்வார்கள். கால பலம் குறையவில்லை. புதிய துறையொன்று புலப்பட்டது. சமஸ்தானப் பிரச்னைகளில் கவனத்தைத் திருப்பினார். சந்தர்ப்பம் மறுமுறை வாய்த்தது. வில்லிங்டன் பிரபு ராஜப்-பிரதிநிதியாகப் பதவி ஏற்றார். பூர்வாசிரமத்தில் இருவருக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. திருவாங்கூர் சமஸ்தானத்திற்கு உதவச் சமயம் வாய்த்தது. சமஸ்தான ஆலோசகராகக் காலை ஊன்றிக்கொண்டார். இரு முறை இடையிடையே மத்திய நிர்வாக சபை அங்கத்-தினராகப் பொறுப்பேற்றார். முடிவில் சமஸ்தான திவானாகப் பதவி ஏற்றார்.

திராசு

திருவாங்கூர் பெரிய சமஸ்தானங்களில் ஒன்று. 7,625 சதுர மைல் விஸ்தீரணம்; 50 லக்ஷம் ஜனங்கள் அடங்கியது: இரண்டரைக் கோடி ரூபா வருவாயுள்ளது. ஆணும் பெண்ணும் படிப்பில் ஆர்வமுள்ளவர்கள்: சிரமப்பட்டுச் சம்பாதிக்கவும், சிக்கனமாக வாழவும் தேறியவர்கள். இந்தப் பிரதேசத்தை வளப்படுத்தவும், இந்த ஜனங்களைக் கைதூக்கிவிடவும் முனைந்தார் ஸர் 'ஸி. பி': சமஸ்தானங்களில் உருவான வேலை செய்ய ஸௌகரியங்கள் இரண்டு தேவை. அரண்மனையின் ஆதரவு முதலாவது: இரண்டாவது பிரிட்டிஷ் கவர்ன்மெண்டிடம் செல்வாக்கு. இரண்டும் 'ஸி. பி.' க்கு இருந்தன. சொந்த அளவில் விளம்பர மகிமையை அறிந்தவர், ஊர் அளவில் மறக்கவில்லை; அஸோஸியேடட் பிரஸ் என்ற செய்தி ஸ்தாபனத்தின் கிளை யொன்று ஏற்படுத்தப்பட்டது. பத்திரிகைகளில் சமஸ்தானத்தைப் பற்றிய செய்திகள் அடிக்கடி வெளிவர ஆரம்பித்தன. செய்திகள் வந்தால் போதுமா? பிரியப்பட்டுப் படிக்க வேண்டுமே! படித்தவர் செய்தியைப் பரப்ப வேண்டுமே! அதற்கும் வழி கண்டார். ஹரிஜனங்களை ஆலயங்களில் விட மஹாராஜாவுக்கு யோசனை சொன்னார். பல காரணங்களை முன்னிட்டு யோசனையும் பக்குவமாகப் பட்டது.

கோவில்கள் திறக்கப்பட்டன. பிரத்தியக்ஷ மாகாத்மியம் ஒன்று தெளிவாகக் காணக்கிடந்தது. மூலையில் மறைந்து கிடந்த சமஸ்தானம், யாரும் அறிய, பலர் புகழ, கண்ணைக் கவர்ந்தது. நாட்டிலே வலுவான கட்சி காங்கிரஸ்: நாடெங்கும் கூட்டம் கூட்டிக் கொண்டாடிற்று. எங்கும் பொங்கிய மதிப்பைப் பயன்படுத்திக்கொள்ள முயன்றார் 'ஸி. பி': தொழில் செழிக்கவும், வியாபாரம் வலுக்கவும் வழி தேடினார். தொழிலுக்கு விசை திட்ட, பள்ளிவாசல் மின்சாரத்திட்டம் கைக்கொள்ளப்பட்டது. தனிச் சர்வகலாசாலை யொன்றும் நிறுவப் பட்டது. கலை வளர்ச்சிக்கு அரண்மனை ஆதரவையும் தேடிவைத்தார். நகரை அழகுபடுத்தி, சுற்று வட்டாரங்களுக்குச் செல்லும் பாதைகளைச் சீர்படுத்தி, பார்ப்பவர் பிரமிக்கச் செய்தார். சமஸ்தானத்தில் அவர் செய்து வரும் ஸேவையைக் கோத்துக் கூறவோ, குணம் காணவோ சமயம் இது அல்ல. காலம் செல்ல வேண்டும்; இடை வாதங்கள் மறைய வேண்டும். இன்று சொல்லக்கூடியது ஒன்றுதான். சமஸ்தானத்திற்கு யோகம் உண்டானால் அவர் அங்கே நிலைக்கவேண்டும். தீர்க்க தரிசனம் உள்ளவர்; தைரியமும திடமும் படைத்தவர்; வயதேறியும் வாட்டமுறவில்லை. செயலாளர்; சொல்லளவு செயல் இல்லா விட்டாலும்

திராக்

சொல்லிக் கொள்ளக்கூடிய அளவு உண்டு. தற்புகழ்ச்சியிலும் தவறில்லை; ஆதாரம் இருந்தால் போதும்; ஆதாரம் உண்டு.

சுப்பிரமணிய பாரதியார்

12

பாரதி *

பாரதி இறந்து இன்று பதினெட்டு வருஷங்கள் ஆகின்றன. அவர் பேசிக்கேட்ட பலர் உயிருடன் இருக்கின்றனர். பாடிக்கேட்ட பலர் இருக்கின்றனர். அவருடன் நெருங்கிப் பழகிய பலரும் இருக்கின்றனர். இவர்களுக்கெல்லாம் ஒரு தீராத குறை. அது என்ன? 'அன்று பாரதியைத் திண்டாட விட்டார்களே, இன்று கொண்டாட வந்துவிட்டார்களே, என்ன வஞ்சக உலகம் இது!' என்கிறார்கள். உண்மை: மறுக்க முடியாத உண்மை. குறைகூற இடம் உண்டு. கூறுவதும் எளிது. கூறி லாபமென்ன? போனவர் திரும்புவரா? திரும்பினாலும் விரும்புவரா? மெய்யறிவு பெற்ற மேன் மக்கள் குலத்தில் பாரதி பிறந்தார். துன்பக்கடலில் தத்தளித்தார். இன்பத்தையே கடைந்தெடுத்தார். 'கடன் பட்டார் நெஞ்சம் போல்' என்று பாடினார் ஒரு கவி. கடன் சூழக் காலம் கழித்தார் பாரதி. கவலைகொண்டாரோ? இல்லை! நெஞ்சம்

* இது 1939-ஆம் வருஷம் செப்டம்பர் மாதம் 11-ஆம் தேதி அகில இந்திய ரேடியோ மூலம் ஒலிப்பரப்பப்பட்டது.

கலங்கினாரோ? இல்லை! பராசக்திமீது பாரத்தைப் போட்டார். பாடிப் பாடி மெய் மறந்தார். சோதனை யெல்லாம் சோபையை விளக்கிற்று. தங்கத்தைக் காய்ச்சக் காய்ச்ச மாற்று குறையுமா? மாசு மடிந்து ஒளியே வீசும். சோதனை போதனையாக முடிந்தது. க்ஷணப்பித்தம் தெளிந்து, அறுதி உண்மையை அறிந்தார்.

अनन्याश्चिन्तयन्तो मां ये जनाः पर्युपासते ।
तेषां नित्याभियुक्तानां योगक्षेमं वहाम्यहं ॥ [1]

என்று பகவான் கீதையில் அருளியிருக்கிறார். அன்றாட வாழ்வில் இதே தர்மத்தை ஆச்ரயித்தார் பாரதி. பராசக்தியைப் பாராட்டி, விக்னங்கள் விலக, உடலும் உயிரும் ஒளி வீசப்பெற்றார் பாரதி.

यो मां पश्यति सर्वत्र सर्वंच मयि पश्यति ।
तस्याहं नप्रणश्यामि स च मे न प्रणश्यति ॥ [2]

என்று கிருஷ்ண பரமாத்மா கூறினார். ஆத்ம சோதனையில் இறங்கி, ஆழ்ந்த அறிவு பெற்று

---

[1] வேறு நினைப்பின்றி என்னை வழிபடுவார் எவரோ, அந்த நித்திய யோகிகளின் யோக க்ஷேமத்தை நான் பொறுப்பேன்.

[2] எவன் எங்கும் என்னைக் காண்கிறானோ, எல்லாப் பொருள்களையும் என்னிடத்தே காண்கிறானோ, அவனுக்கு நான் அழிய மாட்டேன்: எனக்கவன் அழிய மாட்டான்.

இதே விஷயத்தை இன்னும் விஸ்தாரமாக பாரதி விளக்கியிருக்கிறார். பாரதியின் நூல்கள் கோவையாக வெளிவந்திருக்கின்றன. தொடர்ந்தாற்போல் அவைகளைப் படிக்க வேண்டும். அப்பொழுது அவருக்கு ஏற்பட்ட காலபக்குவம் தானாகத் துலங்கும்; சத்திய சோதனை முடிந்து, சத்தியாக்ரகியாக மாறிய பர்வத்தை அறியலாம். எனவே அவருக்காக நாம் இரங்க வேண்டியதில்லை. அன்று அவர் திண்டாடினால், அவருடைய கர்மம் அது. இன்று நாம் கொண்டாடினால், நம்முடைய கடமை இது. இரண்டும் காலனுடைய கருணை யென்று கொள்ளலாம்.

பாரதியை நேரில் காணவும் நெருங்கிப் பழகவும் அவருடைய அந்திய காலத்தில் தான் எனக்குச் சந்தர்ப்பம் வாய்த்தது; புதுவையிலிருந்து புறப்பட்ட பிறகுதான். ஒரு நாள் காலை 10 மணி இருக்கும். ஆபீஸில் தபால் பார்த்துக்கொண்டிருந்தேன். கன வேகமாய் ஒரு ஜட்கா வண்டி ஆபீஸை நோக்கி வந்தது. ஆபீஸ் பெயரைப் பார்த்ததும், 'நிறுத்து' என்று கூவினார் வண்டியிலிருந்தவர். நிற்கிறவரையில் தாங்கவில்லை. குறுக்குக் கம்பியைத் தள்ளிக் கொண்டு கீழே குதித்தார். தள்ளின கம்பி திரும்பி வந்து சொக்காயில் மாட்டிக்கொண்-

டது. அலக்ஷியமாகக் கையை உதறினார். சொக்காயின் கை கிழிந்துவிட்டது. அதையும் கவனிக்கவில்லை. ஓடோடியும் உள்ளே வந்தார். நான் இருந்த அறைக்கு குறுக்குக் கதவுகள் இருக்கக் கண்டு, சற்று தயங்கினார். மெள்ளக் கதவைத் தட்டினார்: பதில் இல்லை. கதவுக்கு மேல் தலையை நீட்டி உள்ளே பார்த்தார். என்னைக் கண்டதும் சிறிது லஜ்ஜைப்பட்டார். "யார்?" என்று நான் கேட்டேன். "நான்தான் சுப்ரமண்ய பாரதி" என்றார். "வாருங்கள், உள்ளே வாருங்கள், உட்காருங்கள்" என்றேன்.

அன்று கண்ட பாரதி இன்றளவும் என் அகக் கண் முன் நின்றுகொண்டே இருக்கிறார். நடுத்தர உயரம்; 'ஒற்றை நாடி'; மாநிறம் படைத்த மேனி; பிரிபிரியாய்ச் சுற்றிய வால் விட்ட தலைப்பாகை; அகன்ற நெற்றி; அதன் மத்தியில் காலணா அளவு குங்குமப்பொட்டு. அடர்ந்த புருவங்கள் உருண்ட கண்களைக் காத்து வந்தன. நிமிர்ந்த நாசி, வாடின கன்னங்களை விளக்கிக் காட்டியது. முறுக்கிய மீசை மேல் உதடை மறைத்தும், உறுதியிழந்த உயிர் நிலையைக் கீழ் உதடு காட்டிவிட்டது; உடல் மீது பித்தான் இல்லாத ஷர்ட்டு; அதை மூட ஒரு 'அல்பகா கோட்'; வண்டியிலிருந்து குதித்த போது அதுவும் கிழிந்துவிட்டது. நாற்காலியில்

உட்கார்ந்தார். நாவெழவில்லை: கண்கள் வட்டமிட்டுக்கொண்டிருந்தன; அறையைச் சுற்றிச் சுற்றிப் பார்த்தன; என்னையும் ஏற இறங்கப் பார்த்தன. வெருண்ட கண்கள்: வேதனை வடிந்த கண்கள்: சாந்தம் நிறைந்த கண்கள். வசியம் மிகுந்த கண்கள். அவை என் உள்ளத்தைக் கொள்ளைகொண்டு விட்டன. அன்று நான் பாரதி தாஸனாக மாறினேன். பழகப் பழக, நேசம் பாசமாகவே மாறிற்று.

பாரதியிடத்தில் நான் கண்ட விசேஷம் என்ன? பால் மணம் மாருத குழந்தைகளிடம் காணும் குணங்களைக் கண்டேன். சூது வாது தெரியாது; வேற்றுமை கிடையாது: நயமுண்டு; பயமில்லை; கையிலிருப்பதைப் பகிர்ந்து கொடுப்பார்; நாளையைப் பற்றி நினைக்க மாட்டார்; படாத கஷ்டங்கள்பட்டார்; தழும்பு தரிக்கவில்லை. அறியாத வயதில் தாயை இழந்தார்; அநுபவமில்லாத வயதில் தந்தையை இழந்தார். போஷகர்கள் ஒரு பக்கம் மறைய, போஷிக்கும் பொறுப்பு இன்னொரு பக்கம் ஏற்பட்டது. இளம் பிராயத்தில் மணம் புரிந்து குடும்ப பாரம் உரைக்கத் தலைப்பட்டது. பிதுரார்ஜிதம் பூஜ்யம்; பிழைப்புக்கு வழி துலங்கவில்லை. பெரிய படிப்பாளி அல்ல; ஏட்டுப் படிப்பில் என்றைக்கும் நாட்டம் செல்லவில்லை.

சென்னை வந்து சேர்ந்தார். சுழலில் சிக்கிக் கொண்டார். சுதேசி இயக்கம் தோன்றிய காலம் அது; விடுதலை வேட்கை பிறந்த காலம். வெற்றி முரசு கொட்டினார் பாரதி. உறக்கம் தெளிய, வீரம் சொரியப் பாடினார் பாரதி. அன்று தாயகத்திற்கு அவர் செய்த ஸேவை அளவிடற் பாலதன்று. அதிகாரி வர்க்கம் விழித்துக் கொண்டது; புதுவையில் மறைந்தார்; மனம் சோர்ந்தார். மறு மலர்ச்சி தோன்றிய பிறகே வெளிவந்தார். பிரஷ்ட வாழ்வும், கஷ்ட ஜீவன-மும், நஷ்ட நம்பிக்கையும், அறிவை வளர்க்கும் ஸாதனங்களாக உதவின. கல்லூரியில் கற்காததைக் கடற்கரையில் கற்றார். சென்னையிலும் புதுவையிலும் அவர் கடற்கரை செல்லாத நாள் கிடையாது. கரையில் உட்கார்ந்த வண்ணம், அலைகள் துள்ளித் தாவி, உருண்டு, திரண்டு, புரண்டு, நுரையும் நீருமாய்த் தாண்டவ மாடுவதைக் கண்டு களித்தார். இயற்கையி-லிருந்து செயற்கையை அறிந்தார். மனித வாழ்வின் மூல மந்திரத்தை உணர்ந்தார். ஸம பாவம் பிறந்தது; நிஷ்காமம் தொடர்ந்தது. வீரம் வைராக்கியமாக மாறியது; தர்மம் ஸேவாஸ்வரூபம் பெற்றது. புதுவையில் புகுந்த பாரதி வேறு; புதுவையிலிருந்து வெளிவந்த பாரதி வேறு. உள்ளே சென்றவர் வீரர்;

வெளியே வந்தவர் ஞானி. ஞானிகளுக்கு இருப்பிடம் இகத்தில் அல்ல. இரண்டு வருஷங்களுக்குள் அழைப்பு வந்துவிட்டது. பூத உடல் நீத்தார்; புகழ் உடல் நிலைத்தது.

பாரதி திருநாளை இன்று தமிழ் நாடெங்கும் கொண்டாடுகிறோம். எதற்காக? அபூர்வமாக, அபாரமாக, என்ன செய்து சாதித்து விட்டார்? பாரதியின் கவிதையைப் பற்றியும் கற்பனையைப் பற்றியும் பலர் புகழ்ந்து கூறுகின்றனர். கம்பருடனும் காளிதாஸருடனும் ஒப்பிடுகின்றனர். அயல் நாட்டுக் கிரந்தங்களைப் படித்தவர்கள் அந்த நாட்டுக் கவி சிரேஷ்டர்களுடன் ஒப்பிடுகின்றனர். எந்த தேசக் கவியுடனும் எந்த முறையில் சோதித்தாலும் பாரதி சளைக்க மாட்டார் என்பது உறுதி. ஆனால் அவர் செய்த ஸேவையின் சிறு பகுதியையே அது குறிக்கும். பாஷைக்குப் பெருமையைத் தேடியதே அவர் செய்த அரிய ஸேவை. தமிழ் நாட்டிலே தாய் பாஷையின் மாற்று மங்கி இருந்தது. அன்னிய ஆட்சியில், அன்னிய பாஷைக்கு அளவு கடந்த மதிப்புக் கொடுத்து, ஆணவத்தை இழந்து விட்டனர் தமிழ் மக்கள். பதவியும் பொறுப்பும் படைத்த பெரியோர் சுயபாஷையில் பேசக் கூச்சப்பட்டனர். குறை வென்றும் நினைத்தனர். பாஷையின் மீது பழியைச் சுமத்தினர். பாரதி

தோன்றுமுன் இருந்த நிலைமையை இன்றைய நிலைமையுடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். மாறுதலுக்கு முக்கிய காரணம் பாரதி என்பது என் ஸித்தாந்தம். தமிழை உயிர்ப்பித்தவர் அவர்; ஊட்டம் அளித்தவர் அவர்; பாஷையின் லாகவத்தை மெய்ப்பித்தவர் அவர்; பாஷைக்கு மேனி அளித்தவர் அவர். அவர் எழுதிய தமிழ் சித்திர வடிவம் பெற்றது. முத்துக்கோர்ப்பது-போல் அவர் எழுதுவார்; தன்னந்தனி எழுத்துக்-கள்; சின்னஞ் சிறு வார்த்தைகள்; குழந்தை-களின் மழலைச் சொற்போல் சுவை நிறைந்தவை. தமிழ், கானத்திற்கு இசைந்த பாஷை, வல்லவர் ஆண்டால் ராகமும் தாளமும் தானுகக் கட்டும் என்பதை பாரதி கண்டார். இன்பம் தர, துன்பம் தீர, பயம் நீங்க, பலம் ஓங்க, வீரம் சுரக்க, தீரம் தெரிக்க, உள்ளம் உருக, ஊக்கம் பெருக, தமிழ் மொழிபோல் தரணியில் காண்பது அரிது என்ருர் பாரதி. 'சேமமுற வேண்டு மெனில் தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்-கச் செய்வீர்' என்ருர் பாரதி. 'உள்ளத்தில் உண்மை யொளி யுண்டாயின், வாக்கினிலே ஒளி யுண்டாம்' என்ருர் பாரதி. தமிழ்த் தாய்க்கு அவர் ஆற்றிய தொண்டே பெரியது. அதை அறிவுறுத்தவே இன்று அவரைக் கொண்டாடு கிரேும். அவர் ஆத்மா சாந்தியடைக! அவர் காட்டிய வழி எங்கும் ஓங்குக!

சுதேசமித்திரன் பிராஞ்சு பிரஸ், சென்னை.

MARAIMALAI ADIGAL LIBRARY MADRAS-1